# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

உள்ளுறை


பிட்டுக்கு மண் சுமந்தது.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் உரை — [illegible]

தென்புலத்தார் யார்? — [illegible]

நால்வர்களும் கல்வெட்டுகளும் — [illegible]

பண்டைத் தமிழ்ச் சொற்கள் — [illegible]

போர்க்கருவிகள் போந்த புதுமை — [illegible]

சிவஞானபோதக் கருத்து — [illegible]

கருமை — [illegible]

அகத்தியர் ஆரியரா? தமிழரா? — [illegible]

கொன்றை பதிகம் - செய்யுள், உ.

தனித் தமிழ்த் தேர்வுகள்



DIGITIZED

72
031 ழ211,ந26
N31-7-8
199647



South India Saiva Siddhanta W...
Publishing Society, Tinnevelly

## ‘செந்தமிழ்ச் செல்வி’ இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

### (Editorial Board Members)

தலைவர்.

1. திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M. A., M. L.,
*அட்வகேட், தாகூர் சட்ட விரிவுரையாளர்.*

---

2. ,, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
*தலைமைத் தமிழாசிரியர், பிஷப் ஹீபர் கலாசாலை, திருச்சி.*

3. ,, துடிசைக்கிழார். சிதம்பரனாரவர்கள்,
*போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், நாமக்கல்.*

4. ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.,
*பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.*

5. ,, பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
*மகிபாலன்பட்டி.*

6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B. A.,
*வழக்கறிஞர், சாத்தூர்.*

7. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
*தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.*

8. ,, பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்,
*அமைச்சர், தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி.*

9. ,, அ. மு. சரவண முதலியாரவர்கள்,
*தமிழாசிரியர், விராலுகுடி.*

---

## பிரசோற்பத்தி வருட

# சைவப் பஞ்சாங்கம்

கிளேஸ் பிரதி விலை அணா 2. ரப் அணா $1\frac{1}{2}$

குறிப்பு:—1. *தனிப்பிரதி வேண்டுவோர் 1-அணா தபாற்றலையுஞ் சேர்த்தனுப்புதல் வேண்டும்.*

2. *வியாபாரிகட்குத் தக்க கழிவு தரப்படும்.*

[illegible]ன் 7 ஆண்டுப் பஞ்சாங்கமும் கிடைக்கப் பெறும்.



அ. சோமசுந்தரக் கடவுள் பிட்டுக்கு மண்சுமந்தது.

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௯ } மெய்கண்டான் யாண்டு-௭௱௮ ஆவணித்திங்கள் 1931ஆ ஆகஸ்டுமீ—செப்டம்பர்மீ { பரல் ௮

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க் கல்லது
தத்து வனலன் தண்புக லூரனே.

*தத்துவந்தலை*=மண்முதல் நாத மீறாகிய ௩௬ தத்துவங்களினது உச்சி

*கண்டறிவாரிலை*=பார்த்து அறிகின்றவர்கள் (உலகில்) இல்லை.

*தத்துவந்தலை கண்டவர்*=தத்துவங்களினது உச்சியைக் கண்டவர்

*கண்டிலர்*=(இறைவனைத்) தாங்கள் வேறு அவன் வேறாகப் பார்க்க மாட்டார்கள். (அவனோ டிரண்டறக் கலந்து நின்று அவனைத் தங்கள் மெய்யுணர்வில் அறிவார்கள் என்றபடி)

*தத்துவந்தலை நின்றவர்க்கு அல்லது*=தத்துவங்களினது உச்சியில் நின்று பார்க்கிற மெய்யுணர்வு உடையார்க்கு அல்லாமல்

*தண்புகலூரன்*=குளிர்ச்சி பொருந்திய திருப்புகலூரில் திருமேனி கொண்டருளி யிருக்கும் இறைவன்

199642



தத்துவன் அலன் = உண்மையியலில் விளங்கமாட்டான்

விளக்கவுரை

தத்துவந்தலை என்பது ௯௬ தத்துவங்களின் உச்சி; அதாவது நாத தத்துவத்திற்கு மேலிருக்கிற அறிவு வெளி (ஞானாகாசம்). இந்த அறிவு வெளியில் இறைவன் நடஞ் செய்கின்றான்.

கண்டறிவாரில்லை என்பது தத்துவங்களைக் கடந்து அவைகளுக்கு மேல் அறிவு வெளியில் உண்மை இயலில் விளங்குகின்ற இறைவனைத் தங்கள் மெய்யுணர்வில் (சுவானுபூதி உணர்வில்) உணர்கின்றவர்களில்லை; அவ்வாறு உணர்கின்றவர்கள் அரியர்கள் என்றபடி.

தத்துவந் தலைநின்றவர் கண்டிலர் என்பது அவ்வாறு ௯௬ தத்துவங்களையுங் கடந்து அப்பால் நிற்கின்ற மெய்யுணர் வுடையவர்கள் இறைவனோடொற்றித்து நின்று அத்துவிதமாய் உணர்த லல்லது, தாங்கள் வேறு இறைவன் வேறாய் நின்று இரண்டு பொருளாக அறிவதில்லை என்றபடி. இதே கருத்தைத் திருநாவுக்கரசு சுவாமிகள் "நின்னை யொப்பார் நின்னைக்காணும் படித்தன்று நின்பெருமை" என்று தனித் திருவிருத்தத்திற் கூறியிருத்தல் காண்க.

தத்துவந்தலை நின்றவர்க்கல்லது தண்புகலூரன் தத்துவனலன்: ௯௬ தத்துவங்களையுங் கடந்து, அப்பால் இறைவனுடன் இரண்டற ஒன்றுபட்டு நிற்கும் மெய்யுணர்வு உடையார்களுக்கே அவர்களுடைய உணர்வில் இறைவனுடைய உண்மையியல் விளங்கித் தோன்றும்; ஏனையோர்க்கு விளங்கித் தோன்றாது. தத்துவங்கள் நீங்கும் வரை கருவி அறிவு முற்றிலும் நீங்காதாதலின், மருள் முற்றிலும் நீங்காது என்பது கருத்து.

இந்தத் தேவாரக் கருத்தைத் திருமூலர் தாம் அருளிச்செய்த திருமந்திரத்தில் (2271)

"ஆறாறுக் கப்பா லறிவா ரறிபவர்
ஆறாறுக் கப்பா லருளார் பெறுபவர்
ஆறாறுக் கப்பா லறிவா மவர்கட்கே
ஆறாறுக் கப்பா லரனினி தாமே."

என்று கூறியருளினர்.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

---



# தென்புலத்தார் யார்?

[ஆசிரியர் மறைமலையடிகள் எழுதியது]

(௧௧௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

இன்னும், இதன் பத்தாங் காண்டத்தில் வேதங்கள் மூன்று (த்ரயீவித்யா) என்றே நுவலப்படுகின்றன. இதனை உற்று நோக்குங்காற், சதபதபிராமணம் எழுதப்பட்ட காலத்தில் ஆரியவேதங்கள் மூன்றே யிருந்தன வென்பதும், இதற்குப் பிற்பட்ட காலத்திலேதான் ஆரியர் அதர்வத்தையுஞ் சேர்த்து அவற்றை நான்காக்கின ரென்பதும், இவர் இங்ஙனந் தம் ஆரிய வேதத்தை நான்காக்கியது தமிழர்கள் தமது வேதத்தை அஃது அறம் பொருள் இன்பம் வீடு நுதலுதல்பற்றி நான்கு கூறாக வழங்கியது கண்டேயா மென்பதும் இனிது விளங்காநிற்கும்.

இன்னும், இந்நாலின் பதினான்காங் காண்டத்திலே 'சூத்திரம்' என்னுஞ் சொல் முதன்முதற் காணப்படுகின்றது. இதற்கு முற்பட்ட இருக்கு முதலான பழைய ஆரிய நூல்களில் யாண்டும் இச்சொற் காணப்படுகின்றிலது. பண்டை யாரிய நூல்களில் ஓரிடத்துங் காணப்படாத இச்சொல், முதன்முதல் இச் சதபதபிராமணத்தின்கட் காணப்படுதலை ஆராய்ந்துபார்க்குங்கால், இந்நூல் இயற்றியகாலத் திருந்த ஆரியர் தமிழரொடு கலந்து, அவர்தம் நூலில் வழங்கிய 'சூத்திரம்' என்னுஞ் சொல்லை யெடுத்து, இதன்கண் வழங்கிக்கொண்டா ரென்பது தெற்றென விளங்காநிற்கும். இச் சதபதபிராமணம் இயற்றப்படுதற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றியதாகிய தொல்காப்பியச் செந்தமிழ் நூலின்கண், *

"மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகித்

* தொல்காப்பியநூலின் காலம் இற்றைக்கு ௩௫௦௦-ஆண்டுகளுக்கு முற்பட்டதாதல் எமது 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' என்னும் நூலில் விரித்து விளக்கப்பட் டிருக்கின்றது.

துளக்க லாகாத் துணைமை யெய்தி
அளக்க லாகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்றெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்'' (மரபியல், ௱)

என்று போந்த சூத்திரத்தாற் 'சூத்திரம்' என்னுஞ் சொல்லும் அதனால் உணர்த்தப்படும் பாவின் இலக்கணமும் நன்கு அறிவுறுத்தப்பட்டமை காண்க. இவ்வாற்றாற் 'சூத்திரம்' என்பது தனித்தமிழ்ச் சொல்லேயாதலும், அதனைத் தமிழ்மக்களிடமிருந் தெடுத்தே சதபதபிராமணகாலத் தாரியர் வழங்கிக் கொண்டாராதலும் ஐயுறவுக்கு இடனின்றி நிறுவப்படுதல் காண்க.

இன்னுந், தெற்கே தமிழ்நாட்டின் ஒரு பெரும்பகுதியாகிய குமரிநாடு கடல்கொண்டழிந்த வரலாறு, இச் சதபதபிராமணத்தின் முதற்காண்டத்தின்கண் (௮, ௧, ௧) விரிவாகச் சொல்லப்பட் டிருத்தலால், இந்நூல் அக் கடல்கோளுக்குப் பின்னர் இயற்றப்பட்டமையும், இதனை அக்காலத்து ஆரியர் வடநாடு போந்த தமிழர்பாற் கேட்டுணர்ந்து அதன்கட் குறிப்பிட்டமையும் நன்கு பெறப்படும்.

அதுவேயுமன்றிப், பாண்டவர் ஐவர் காலத்திற்குப்பின் இச் சதபதபிராமணம் இயற்றப்பட்ட தென்பதற்கு, அசுவமேதஞ் செய்து கொலைப் பாவத்தைக் கழுவிக்கொண்டவராகச் சொல்லப்படும் 'ஜநமேஜய,' மன்னனும் அவனுடன்பிறந்தாரான 'பீமசேனன்,' 'உக்கிரசேனன்,' 'சுருதசேனன்' என்னும் மூவரும் இதன் ௧௩-ஆங் காண்டத்திற் சொல்லப்பட் டிருத்தலே உறுபெருஞ் சான்றாம். இம் மன்னர் நால்வரும் பாண்டவ அரசரின் வழித் தோன்றல்கள் ஆதல், பாரத கதையினை யுணர்ந்தார் எவரும் நன்கறிவர். எனவே, தலைச்சங்கத் திருந்து தமிழாராய்ந்தவரும், பாண்டவர் காலத்தவனான பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனுக்கு நண்பரும் ஆன முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் பெருமான் காலத்திற்குச் சிறிதேறக் குறைய ஒரு நூற்றாண்டு கழிந்த பின்னரே 'சதபதபிராமணம்' இயற்றப்பட்டதாகல் வேண்டுமென் றுணர்ந்துகொள்க.



மேலுஞ், சதபதபிராமணத்திற் குறிக்கப்பட்ட தமிழ்நாட்டுக் கடல்கோளுக்கு முன் 'பஃறுளி' யாற்றங்கரைப் பக்கத்தே பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் வேந்தர்பெருமான் அரசு செலுத்தின வரலாறு, மேலெடுத்துக் காட்டின "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்னும் புறநானூற்றுச் செய்யுளால் இனிது விளங்குதலின், சதபதபிராமணகாலம் இப்பண்டைப் பாண்டிவேந்தன் காலத்திற்கும் பிற்பட்டதாதல் தெற்றெனப் புலனாம். அத்துணைப் பழைய காலத்திருந்த இப் பாண்டிவேந்தன் சிவபிரான் றிருவடிக்கண் மிக்க அன்புடையனா யிருந்தனனென்பது,

"பணியியரத்தை நின்குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே''

என்று காரிகிழார் என்னும் புலவர் பெருமான் அவனைச் சிறப்பித்துப் பாடிய புறநானூற்றுச் செய்யுளால் (௬) நன்குணரப்படும். சிவநேயத்திற் சிறந்த இப் பாண்டிய மன்னனை அக்காலத்திருந்த ஆரியக் குருமார் தம் வயப்படுத்தி, அவன் பல யாகங்களையுஞ் செய்யும்படித் தூண்டிவிட்டன ரென்பதனால், அவ்வாரியக் குருமார் அத்துணைப் பழைய நாளிலேயே நம் தமிழ்நாடு புகுந்து நம் அரசர்களையுஞ் செல்வர்களையுந் தம் வயப்படுத்தித் தமது வேள்விச் சடங்குக்கு அவர்களை உடன்படுத்திக் கொண்டமை நன்கு புலனாகின்றதன்றோ? இவ்வாறு அவ்வேந்தன் ஆரியக் குருமார் சூழலில் அகப்பட்டுப் பல வேள்விகளைச் செய்ததனாலேயே 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமி' எனப் பெயர் வழங்கப்பெற்றான்.

இங்ஙனமாக ஆரியக் குருமார் மிகப் பழைய நாளிலேயே வடநாட்டி லிருந்த தமிழ் மன்னர்களான பாண்டவர் முதலாயினாரைத் தம் வயப்படுத்திக்கொண்டாற் போலவே, அவர் தென்றமிழ்நாடு புகுந்து இங்கிருந்த வேந்தர்களையுந் தம் வயப்படுத்திக்கொண்டார். இங்ஙனம், இவர் தமிழ் வேந்தர்களைத் தம் வயப்படுத்திக் கொண்டாலும், அவர்க்குரிய கடவுள் வழிபாடும் ஏனை நல்லொழுக்க முறைகளும், மிக விழுமியவாய் இருந்த

மையின், அவைதம்மை அழிக்கமாட்டாராய்ச், சில திரிவுபாடுகளுடன் அவற்றைத் தாமுங் கைக்கொண்டு, தம் நூல்களில் வரைந்து வைத்து ஒழுகலாயினர். இவ்வாறவர் தமிழர்பாலிருந்தெடுத்துத் தாம் கைக்கொண்டொழுகிய ஒழுகலாறுகள் பலவற்றுள், 'தென்புலத்தார்' கடனும் ஒன்றாகும்.

இனி, இச் சதபதபிராமண காலத்திற்கு முற்பட்டவனாகிய 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி'மேல் நெட்டிமையார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்னுஞ் செய்யுளில், தென்புலத்தார்க்கு நன்றிக்கடன் செலுத்துந் தமிழரின் ஒழுகலாறு நுவலப்பட்டிருத்தலின் இச் சதபதபிராமணம் இயற்றப்படுதற்கு முன்னமே நம் பண்டைத் தமிழ்மக்கள் தெற்கே குமரிநாட்டிலிருந்த தம் மூதாதையரை ஒருங்கே நினைந்து இறைவனை வழிபட்டு வந்தமை தெற்றென விளங்காநிற்கும். இங்ஙனந் தெற்கிருந்த தம் மூதாதையர்க்கு நன்றிக்கடன் செலுத்திவந்த தமிழரது ஒழுகலாறு, இருக்கு, எசுர் முதலான மிகப்பழைய ஆரிய நூல்களுள் யாண்டும் நுவலப்படாமையின், அக்காலத்து ஆரியர்க்கு அது தெரியாதென்பதூஉம், மற்று அந் நூல்களுக்குப் பிற்பட்டு வந்த சதபதபிராமணத்தில் அவ்வொழுகலாறு நுவலப்பட்டிருத்தலின் அப் பிற்காலத்தாரியர்க்கே அது தெரியலாயிற்றென்பதூஉம் ஐயுறவுக்கிடனின்றி நாட்டப்பட்டமை காண்க.

இனி, ஆரியர் இவ்விந்திய நாட்டிற் புகுந்த காலந்தொட்டே, தமக்கு ஊண் கொடுத்து உடை கொடுத்து இருக்க உறையுள் கொடுத்துப் பல வகையால் உதவியாற்றி வந்த தமிழ்மக்களைத் 'தஸ்யுக்கள்,' 'தாசர்கள்,' 'இலிங்கத்தை வணங்குபவர்கள்,' 'வேள்விச் சடங்கு செய்யாதவர்கள்,' 'அசுரர்கள்,' 'இராக்கதர்கள்' என்று இகழ்ந்து வந்தமையோடு, அவர்களைச் சுவடற அழித்துவிட வேண்டுமென்றுந், தாம் வணங்கிய 'இந்திரன்,' 'வருணன்' முதலான தேவர்களை ஓயாமல் வேண்டிவந்திருக்கின்றார்கள் இக்காலத்துந் தம்மைச் 'சாமி, சாமி' என்று பல



வகையாற் கொண்டாடித், தமக்கு வேண்டிய உதவிகளையெல்லாஞ் செய்துவருந் தமிழ் மக்களை, அவ்வினத்தவர் 'சூத்திரர்' என்னும் மிக இழிவான சொல்லால் வழங்கிவருதல் எவரும் அறிந்ததன்றோ? இங்ஙனம் பண்டைநாள்தொட்டு இன்றுகாறும் ஆரியரும் அவர் குழுவிற்சேர்ந்து அவர் வண்ணமாயினாருந் தமிழரை நஞ்சாகப் பகைத்து வரும் வரலாறுகளை **வேளாளர் நாகரிகம், சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்** என்னும் நூல்களில் விரித்து விளக்கிக்காட்டியிருக்கின்றேம். இவ்வாறு தமிழர்பால் ஆரியர்க்கு இயற்கையேயுள்ள நச்சுப்பகைமை, இச் சதபதபிராமண காலத்து ஆரியர்மாட்டுங் காணப்படுகின்றது. இவ் ஆரியர்கள் தாம் தேவரெனவுந், தாம் உறையும் வடதிசைக்கண் மட்டுமே தேவர்கள் உறையுந் துறக்கவுலகம் உண்டெனவுந், தாம் மட்டுமே அத் துறக்கவுலகு செல்லத், தம்மவரல்லாத தமிழர்களாகிய அசுரர்களெல்லாந் தெற்கேயுள்ள கூற்றுவனுலகு செல்வரெனவும் வரைந்திருக்கின்றனர்; அது வருமாறு:—

சதபதபிராமணம், ௧௨-ஆங் காண்டம், ௭-ஆம் அத்தியாயம், ௩-ஆம் பிராமணம், ௭.

"இரண்டு வேதிகள் இருக்கின்றன, 'தேவருலகும் பிதாருலகும் என ஈருலகுகள் உண்டு' என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். ஒன்று (ஒருவேதி) வடக்கிலும் மற்றொன்று தெற்கிலும் இருக்கின்றன; ஏன் என்றால், தேவர்களுலகு வடக்கிலும் பிதுரர்களுலகு தெற்கிலும் உள்ளன; வடபால் உள்ளதனால் அவன் தேவருலகைப் பெறுகின்றான், தென்பால் உள்ளதனால் அவன் பிதுராருலகைப் பெறுகின்றான்."

௧௩-ஆங் காண்டம், ௮-ஆம் அத்தியாயம், ௧-ஆம் பிராமணம், ௫

"தேவர்கள் தமக்கு எதிரிகளும் பகைவருமான அசுரர்களை அவர்களிருந்த இடங்களினின்றுந் துரத்திவிட்டார்கள்; இருக்க இடமில்லாமையால் அவர்கள் வெல்லப்பட்டார்கள். ஆனதனாற்றான், தேவரினத்தைச் சேர்ந்த மக்கள் தாம் புதைக்கும் இடங்களை நாற்கோண வடிவினதாக அமைக்கின்றனர்; மற்று, அசுர

இனத்தைச் சேர்ந்த கீழ்நாட்டவரும் (சூத்திரரும்) பிறருமோ தேவர்களால் தாம் தம் இருப்பிடங்களினின்றுந் துரத்தப்பட்டவர்களாதலால், அவற்றை வட்ட வடிவினதாக அமைக்கின்றனர். அவன் அவ்விடத்தைக் கிழக்கிற்குந் தெற்கிற்கும் இடையிலே தங்குமாறு அமைத்தான்; ஏனென்றால், பிதுரர் உலகிற்குச் செலுத்தும் வாயில் மெய்யாகவே அவ்விடத்திலேதான் இருக்கின்றது.’’

இவ்வாறிவர்கள் வரைந்திருப்பது கொண்டு, வடபால் உள்ளதுதான் தேவர்கள் உறையுந் துறக்கவுலகமாம் என்பதுந், தென்பால் உள்ளதுதான் பிதுரர்கள் உறையும் நரகவுலகமாமென்பதும், ஆரியராகிய தாமெல்லாந் துறக்கவுலகு செல்லத் தமிழராகிய பிறரெல்லாந் தெற்கேயுள்ள நரகவுலகே செல்வரென்பதும் இவ் வாரியர்க்குக் கருத்தாதல் நன்கறியப்படும். எனவே, தமிழர்க்கு நரகப்பேறல்லது வேறில்லையென்றும், பிதுரருலகென்பது நரகவுலகே யன்றிப் பிறிதன்றென்றும் இவ்வாரியர் கொண்டமை நினைவில் இருத்திக்கொள்க. இங்ஙனந் தமிழர்மேல் வைத்த நச்சுப்பகைமை காரணமாகவே, தெற்கே நாகரிக முடையராயிருந்து இறந்துபட்ட தமிழர் தம் மூதாதைகளுக்குரிய தென்றிசையை, உயிரைக் கொள்ளை கொள்ளுங் கூற்றுவனுலகாகவும் அவர்தம் பிதுரருறையும் அவ் வுலகை நரகவுலகாகவுஞ் சதபதபிராமணகாலத் தாரியர் எழுதிவைத்தனர். அவர் இத்துணை இழிவு படுத்தி எழுதிவைத்ததனை ஆராய்ந்து பார்க்கமாட்டாத இஞ்ஞான்றைத் தமிழர்களும் பிதுரருலகு தென்றிசைக்கண் உளதென்னும் அவருரையைத் தழுவி, அதற்கியைய ஒழுகலாயினர் கண்டீர்! இங்ஙனந் தென்றிசைக்கண் உறைவார் ‘பிதுரர்’ என்று கூறிய ஆரியர்க்கு, அவரை அயன் படைப்பான தேவர் என்று மாற்றிச் செல்வதற்கு மனம் ஒருப்படுமோ? ஒருப்படாதன்றே. ஆனதனாற்றான், சதபதபிராமணத்தின்கண் யாண்டும் பிதுரர் ‘தேவர்’ குழுவிற் சேர்த்துச் சொல்லப்படாமல், தேவர்களுறையும் வடதிசைக்கு எதிரான தென்றிசைக்கட் கூற்றுவனுலகில் உறைபவராகச் சொல்லப்பட்டனரென்க. ஆகவே, பரிமேலழகியார்



உரைத்தவுரை ஆரியவேத நூலுக்கும், அதற்குரையா யெழுந்த சதபதபிராமணத்திற்கும் முற்றும் மாறுதல் கண்டுகொள்க.

அற்றேல், பரிமேலழகியார் ‘பிதுரரை’ அயன்படைப்பான கடவுட்சாதி யென்றது எங்கிருந் தெடுத்ததெனிற் கூறுதும். வடமொழியில் இஞ்ஞான்று காணப்படும் புராணங்களிற் பெரும்பாலன, தென்னாட்டின்கண் உள்ள சைவர் வைணவர்களால் ஆக்கப்பட்டனவாகும். இச் சைவ வைணவரிற் பெரும்பாலார் பண்டைத் தமிழரின் வழிவந்தவரே யல்லாமல் ஆரியரின் வழிவந்தவரல்லர். என்றாலும், ஆரியர் இந்நாட்டிற் குடிபுகுந்து இங்குள்ள அரசர்களையுஞ் செல்வர்களையுந் தம் வயப்படுத்தித் தம்முடைய ஆட்சியையும் முதன்மையையும் நாட்டவே, அவருடைய சிறுதெய்வ வணக்க வெறியாட்டு வேள்விகட்குச் சிறிதும் உடம்படாத சைவ வைணவர், ஆரியக் கோட்பாட்டை மறுத்துத் தாம் வணங்கிப் போந்த சிவபிரான் வழிபாட்டையுந் திருமால் வழிபாட்டையும் நிலைநிறுத்துதற்கு, ஆரியர் கொணர்ந்த வடமொழியையே கருவியாய்க்கொண்டு புராணங்களும் ஆகமங்களும் இயற்றினர். இங்கு வந்த ஆரியர் தம்மை நிலத்தேவர் (பூசுரர்) என்றுந், தாம் வழங்கிய மொழியைத் தேவமொழி யென்றுஞ் சொல்லி இங்குள்ள அரசர்களையும் பிறரையும் நம்பச் செய்து, இங்கு எவர்க்கு மில்லாத ஒரு பெருஞ் சிறப்பையும் ஒரு பெரும் பாராட்டையுந் தமக்கு உண்டாக்கிக் கொண்டமையினாலே, அவர்களுடைய கோட்பாடுகளை மறுத்துத் தம்முடைய கோட்பாடுகளை நிலைநிறுத்த வேண்டிய இன்றியமையாமையினையும், அங்ஙனஞ் செய்வது தமிழிலன்றி அவர் சிறந்தெடுத்துப் பாராட்ட வைத்த தேவமொழி யென்னும் வடமொழியின்கட் செய்ய வேண்டிய இன்றியமையாமையினையும், அங்ஙனம் அதன்கட் செய்வதூஉம் மக்களாகிய தம் பெயராற் செய்யப்படின் ஆரியராலும் அவர் வயப்பட்டாராலுங் கைக்கொள்ளப்படாதாகலின் தம் பெயரை மறைத்துக் கடவுட் பெயரால் அமைக்கவேண்டும் இன்றியமையாமையினையும் நன்குணர்ந்த சைவ வைணவர் தத்தந் தெய்வங்களை அப்புராணங்களையும் ஆகமங்களையும் வட

மொழியில் ஆக்கலாயின வென அவற்றில் வரைந்து வைத்தனர். இவ்வடமொழி நூல்க ளெல்லாந் தமிழ்நாட்டி லுள்ளவர்களாலே இற்றைக்குத் தொள்ளாயிர ஆண்டுகளுக்கு முன்னேதொட்டு நெடுக ஆக்கப்பட்டு வந்தமைக்குச் சான்றுகளும் அந்நூல்களின் பிற வரலாறுகளும் எமது **மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்** என்னும் பெருநூலில் விரித்து விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு புராணங்களும் ஆகமங்களும் வடமொழியில் எழுதப்பட்ட பிற்காலத்திலேதான் தென்புலத்து மூதாதையரான பிதூர்களுந் தேவர்களாக உயர்த்தி நம் தமிழர்களால் எழுதி வைக்கப்பட்டார்கள். ஆரியர்கள் தமிழரை அசுரர்களென்றும், அவருறையுந் தென்றிசையைக் கூற்றுவனுலகென்றும், அதன் கண் இருந்து இறந்துபட்ட மூதாதையரை அக் கூற்றுவனுலகு சென்று வைகும் பிதூரரென்றும் இழித்துக் கூறினராகலின் அவ் இழிபை மாற்றவே, புராண ஆகமங்க ளெழுதிய தமிழ்க் குருக்கண்மார் அவரை அயன் படைப்பான கடவுட்சாதி யென்று அந்நூல்களில் வரைந்து வைத்தா ராதல் வேண்டும். அதனைத் தழுவியே பரிமேலழகியாரும் அவரைக் கடவுட்சாதி யென்று எழுதிவிட்டா ரென்க.

முற்செய்த நூல் இது, பிற்செய்த நூல் இது வென்று வரலாற்று முறையில் நின்று ஆராய்ந்து பாராமையினாலேயே தமிழ் ஆரியம் முதலான மொழிகளை நன்கு கற்றவர்களும் நூல்களின் உண்மையும் நூலாசிரியர் கருத்தும் உணராராய்ப் பழையவற்றைப் புதியவாகவும் புதியவற்றைப் பழையவாகவும் மயங்கக்கொண்டு, உண்மையைப் பொய்யாகவும் பொய்யை உண்மையாகவும் நம்பிப் பெரிதும் பிழைபடுகின்றார். அதுவேயுமன்றி, ஆரிய மொழி நூல்களில் எஃது எங்ஙனம் எழுதப்பட்டிருந்தாலும் அதனை அங்ஙனமே நம்பி அறியாமையில் அமிழ்ந்திக் கிடப்பதும் நம்மனோர்க்குள் வேரூன்றிய வழக்கமாய் விட்டது. அதுவல்லாமலும், ஆரியர் தமிழர்க்குச் செய்துபோந்த தீமைகளை எடுத்துச் சொல்லி, இனித் தமிழர் அத் தீமைகளினின்றும் விலகி முன்னேற்ற மடைதற்குரிய வழி வகைகளைக் காட்டினால், அதனையுங் குற்றமாகச் சொல்வார் தந்நலம் பாராட்டுந்



தமிழரிற் பலர் உளராகலின், அவராலும் ஆராய்ச்சியறிவு தடைப்படுகின்றது. என்றாலுந், தென்புலத்தில் மிக்க நாகரிகமுடையராயிருந்து காலஞ்சென்ற தம் மூதாதையர் அனைவரையும் ஒருங்கு சேர்த்து நினைத்து, அவர்க்கு மேன்மேல் நலம் அருள்க வென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நன்றிக்கடன் செலுத்துவதே, அம் மூதாதையர் வழிவந்த தமிழ்மக்களாகிய நமக்கு உரியதாமென்பதூஉம், அதனையே பண்டைத் தமிழ்ச் சான்றோராகிய நெட்டிமையாரும் அவர்வழி பிழையாது வந்த தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் அருளிய செந்தமிழ்ப் பாட்டுகள் அறிவுறுத்துகின்றன வென்பதூஉம், நம் தமிழ் மக்கட் குரித்தல்லாத பிதூர் வழி பாட்டைத் "தென்புலத்தார் தெய்வம்" என்னுந் திருக்குறளுக்கு ஏற்றிச் சொல்லிய பரிமேலழகியாருரை கொள்ளற்பால தன்றென்பதூஉம் இவ்வாராய்ச்சிக் கட்டுரையின் கண் எடுத்துக்காட்டி நம் மக்களை மெய்ந்நெறியில் உய்த்தல் இன்றியமையாததாதல் காண்க.

---

# நால்வர்களும் கல்வெட்டுகளும்

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள், B.A., B.L.]

(௧௨௪ வது பக்கத் தொடர்ச்சி)

## iii. நாயனார் பெயர் வைத்துக்கோள்வது

ஏனைய ஆசாரியர்களைப் போலவே நமது மணிவாசகப் பெருமானின் பெயரையும் மக்கள் இட்டுக்கொண்ட விவரம் இரண்டு கல்வெட்டுகளால் கிடைக்கின்றது. அவை வருமாறு:-

1. **மாணிக்க வாசகன் என்ற பெரிய நாயன்**—இது திருவொற்றியூர் (செங் 976) தியாகராய சுவாமி ஆலயத்தின் (ஆதிபுரீசர்) கர்ப்பக் கிருகத்தின் மேல்சுவரில் இராஜாதிராஜதேவன் I (?) ஆளும் ஆண்டில் (கி. பி. 1024) ஏற்பட்ட சாசனத்தில் உள்ளது. அப்பெயர் கொண்டவர் திருவொற்றியூருடையார் கோயிலின் ஊழியக்காரர் என்றும் ஒரு விளக்கிற்

காக 32 பசுக்களைத் தானம் செய்தார் என்றும் அக்கல்வெட்டு கூறுகிறது.

2. **திருவாதவூர் பொன்மேய்ந்த சோழப் பிரமராயர்:** திருச்சி ஜில்லா இரத்னகிரி (திருச்சி 102) மலையில் வெளிப்புறத்துப் பாறையில் செதுக்கி யிருக்கும் கல்வெட்டில் தெரிகிறது. கி. பி. 24-3-1390-ல் விஜயநகர அரசன் விரூபாட்சிராயர் I காலத்தில் மேற்கூறிய ஒரு பக்தர் நிலவிற்பனை செய்தது குறிக்கிறது. ஆகவே பதினோராவது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஆசாரியருடைய நாமம் பிரபல மடைந்து வந்தது எனலாம். ஆனால் ஏனைய சமயாசாரியர்களைப் போன்று அதிகமாக உதாரணங்கள் கிடைக்காததின் காரணம் தெரியவில்லை.

### iv. சரித்திர விஷயங்கள்

1. **திருவெம்பாவை ஓதல்**—திருவொற்றியூர் ஆதிபுரீசர் ஆலயம். மேற்கு பீடம்-வீரராஜேந்திர தேவர் (1063-70) காலம் சிவவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்து 60 வேலி நிலத்தை மீட்டி அதற்கு வீரராஜேந்திர விளாகம் என்ற பெயர் தந்து அதன் வருமானத்தைத் திருவெம்பாவை திருப்பதியம் பாடுதற்கு உபயோகித்தது.

2. **திருச்சாழல் ஓதல்**—எவ்வாருசூர் (தென்ஆறு—523) கிராமார்த்த நாதேசுவரர் ஆலயம். விக்கிரம சோழன் 17-ம் ஆண்டு-கி. பி. 1135-பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் திருச்சாழல் ஓதுதற்குத் தானம் செய்தது.

3. **திருவெம்பாவை ஓதல்**—வழுவூர் (தஞ்சை 709) வீரட்டானேசுரர் ஆலயம். இராஜாதி ராஜன் II-1-7-1167-மார்கழித் திருவாதிரை நாளில் திருவெம்பாவை ஓதற்குத் தானம் செய்தது. (முன்னர்க் காண்க)

ஆகவே இம்மூன்று கல்வெட்டுகளிலிருந்தும் மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவெம்பாவை திருச்சாழல் இவை ஓதுதற்கு ஏற்பாடுகள் செய்ததை அறிகிறோம். இவைகளும் 1063 முதற்கொண்டே ஏற்பட்டது குறிக்கத் தக்கது. மற்ற



திருவாசகப் பாசுரங்களைக் குறித்து யாதொரு கல்வெட்டும் கிடைக்கவில்லை. நாளிதுவரை கிடைத்த கல்வெட்டுகளில் எல்லாம் வீரராஜேந்திரன் கல்வெட்டே இப் பெருமானைப்பற்றிய முதல் கல்வெட்டு ஆகும் (மேலே சொன்ன ராஜாதிராஜன் I கல்வெட்டின் தேதி சிறிது சந்தேகத்திற் கிடமாகும்). ஆகவே மணிவாசகப் பெருமானின் அருட்பாக்களின் மகிமை உலகத்தார் அறிவதற்குச் சிறிது காலதாமதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

திருவாசகத்தில் திருப்பள்ளியெழுச்சி என்ற பதிகம் ஒன்று உண்டு. அதைச் சிவாலயங்களில் இன்றும் பாடுவதுண்டு. கல்வெட்டுகளில் திருப்பள்ளியெழுச்சியைக் குறித்து இரண்டு கிடைத்தன. ஆனால் அக்காலக் கோயில்களில் மாணிக்கவாசகர் அருளின திருப்பள்ளியெழுச்சியைப் பாடினார்களோ இல்லையோ தெரியவில்லை. ஆராய்வதற்காக அவைகளை இங்கே குறிக்கிறேன்.

1. **காமரசவல்லி** (திருச்சி 837) கார்க்கோடேசுர ஆலயம்: பரகேசரிவர்மன்—9-ம் ஆண்டு—ஸ்ரீபலி, திருப்பள்ளியெழுச்சி இவை நடத்துவதற்காக பூதானம் செய்தது.

2. வழுவூர் (வடஆறு 716) பிரமபுரீசுவரர் ஆலயம். வீரராஜேந்திரன்—7-ம் ஆண்டு—திருப்பள்ளியெழுச்சிக்காக நெல் தானம் செய்தது.

மாணிக்க வாசகர் பாசுரங்களைத் தவிர அவரது சரித்திர பாகத்தில் கண்ட இதர செயல்களைச் குறித்து யாதொரு கல்வெட்டும் கிடைத்திலது. சுந்தரர் சரிதத்தில் "வழக்கு வென்ற அம்பலம்" "பித்தன் என்று பாடச் சொன்னான்" முதலான விசேடங்கள் கிடைத்தன. ஏனைய நாயன்மார்களைப் பற்றியும் சிற்சில குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் நமது மாணிக்கவாசகரைப்பற்றி வெகுதூரம் தேடிப் பார்த்ததில் "குதிரையிடு புராணத் திருநாள்" என்ற ஒரு பிரயோகம் கிடைத்தது. இது தென்காசி குலசேகரமுடையார் ஆலயத்து ஜடிலவர்மன் திருநெல்வேலிப்பெருமான் பாண்டியன் காலத்துச் சாசனத்தில்

உள்ளது. சகம் 1477=5-4-1555-ல் குணராமன் அழகன் பெருமாள் என்ற இளவரசன் பிரதிவருடம் ஆவணி மூலத் தன்று "குதிரை இடு புராணத் திருநாள்" நடத்த பூதானம் செய்ததாகத் தெரிகிறது. "ஆவணி மூலம்", "குதிரை இடு" என்ற இரு பிரயோகங்களிலிருந்தும் அவ்விழா மாணிக்க வாசகரைப் பொறுத்து இருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

இனி, திருவாதிரைத் திருவிழா மாணிக்கவாசகரை ஒட்டி உள்ளதால் அதனைக் குறித்துப் பரிசோதித்ததில் அடியிற் குறித்த ஐந்து ஆலயங்களின் குறிப்புகள் கிடைத்தன. ஆனால் அவைகளில் மாணிக்க வாசகர் பெயர் குறிக்கப் பெறவில்லை. அவையாவன:—

1. தேவிகாபுரம் (வடஆறு 161) ஒரு நாயினப்ப நாயகன் திருவாதிரை உற்சவத்திற்காக நெய் தானம் செய்தது.

2. சூலூர்ப்பேட்டை (நெல்-633) விஜயகண்ட கோபாலன் மார்கழித் திருவாதிரைக்காக 550 குழி தானம் செய்தது.

3. இரத்னகிரி (திருச்சி 107) சுந்தர பாண்டியன் I-23-12-1267-மார்கழித் திருவாதிரைக்காக தானம்.

4. குன்றுண்டார் கோயில் (புது-122) கற்குகையில் எழுத்து. கோதை மைந்தன் (சேரன்) திருவாதிரை யன்று 110 பிராமணருக்கு அன்னதானம்.

5. திருவேங்க வாசல் (புது 390) வைகாசித் திருவாதிரையில் சந்திக் கூத்து நடத்த தானம் (இதன்விவரம் தெரியவில்லை.)

இவ்வைந்து திருவிழாக்களுக்கும் மாணிக்க வாசகருக்கும் சம்பந்தம் உண்டா என்று தெரியவில்லை. எனினும் தற்காலத்தில் எல்லாக் கோயில்களிலும் திருவாதிரையில் மணிவாசகப் பெருமானை எழுந்தருளிவித்தலால் இவ்விழாக்களிலும் அவ்விதமே செய்திருக்கலாம்.

இது நிற்க மணிவாசகர் சரிதத்து அற்புதச் செயல்களான நரியைப் பரியாக்கினது, பிட்டுக்கு மண் சுமந்தது முதலான விழாக்கள் பெரிய ஆலயங்களில் நடந்து வருதலால் அவைகளைக் குறித்து மதுரை முதலிய ஆலயங்களில் ஏன் எழுதப் பெறவில்லையோ தெரியவில்லை.



மற்ற சமயாச்சாரியர்களின் பெயரால் மடங்கள் ஏற்பட்டு அவைகளைப்பற்றிப் பல கல்வெட்டுகளில் குறிப்புகளும் இருக்கின்றன. ஆனால் மாணிக்கவாசகரைப்பற்றி ஒரு மடமாவது காணவில்லை. நமது ஆசிரியர் அன்பிலே ஆழ்ந்திருந்தாரே அன்றி உலக விவகாரங்களில் ஒரு கணமும் செலவிடவில்லை. அவரது அடியார்களும் அத்தன்மையவர்களே. ஆகையால் உலக வழக்காகிய மடங்களைத் தாபிக்கவில்லை போலும். அவர் பெயர் கொண்ட ஈசுவரன் பெயரும் இல்லை. திருவிடை மருதூரில் (தஞ்சை 313-விக்கிரம சோழன் கி. பி. 1923 கல்வெட்டு) மாணிக்கக் கூத்தன் என்ற தலக்கடவுள் பெயரும் மாணிக்க வாசகருக்குக் சம்பந்தப்படாத பெயர் போலும்.

இனி, மேலே சொன்ன கல்வெட்டுகளை வருட வரிசைக் கிரமமாகப் பாகுபடுத்தி ஆராய்ந்து பார்க்கலாம்.

| ஆண்டு கி. பி. | அரசன் | காலம் | மேற்கோள் |
|---|---|---|---|
| 1024 | ராஜாதிராஜன் I | 1018-1050 | iii—1 |
| 1063 | வீரராஜேந்திரன் | 1063-1070 | iv—1 |
| 1135 | விக்கிரமன் | 1118-1135 | iv—2 |
| 1148 | ராஜராஜன் VI | 1146-1178 | ii—1 |
| 1158 | ,, | ,, | ii—2 |
| 1167 | ராஜாதிராஜன் II | ,, | ii—3 |
| 1181 | குலோத்துங்கன் III | (1178-1216) | ii—4 |
| 1226 | ராஜாதிராஜன் III | 1216-1248 | ii—5 |
| 1305 | குலசேகர பாண்டியன் | | ii—6 |
| 1390 | விரூபாட்சன் I | | i—7 |
| 1555 | திருநெல்வேலிப் பாண்டியன் | | iv |

ஆகவே மேற்காட்டிய அரசர்களில் சோழவம்சத்தில் கி. பி. 1024 முதல் 1226 வரையில் 8 சோழ அரசர்கள்

காலத்துச் சாசனங்களில் அதாவது 200 ஆண்டுகள் அளவில் மாணிக்கவாசகரைப் பற்றிய கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. பாண்டிய மன்னர்களில் கி. பி. 1305 மதுரை அரசன் காலத்திலும் கி. பி. 1555 - ல் தென்காசிப் பின் பாண்டியர் ஒருவரின் காலத்திலும் ஆக இரண்டு கிடைத்திருக்கின்றன. தவிர 1890-ல் விஜயநகர மன்னன் விருபாட்சன் காலத்து ஒன்று கிடைத்திருக்கிறது. இப் பாகுபாட்டைக் கவனிக்குமிடத்து ஏனைய ஆசாரியரை ஆதரித்தது போலவே சோழமன்னர்கள் மாணிக்கவாசகப் பெருமானையும் போற்றி வந்தார்கள் என்று ஒருவாறு கூறலாம். ஆனால் மாணிக்கவாசகர் தம் வாழ்நாளில் தொண்டு செய்த அரசனான பாண்டிய மன்னர் அவரைப் பற்றிச் சிறிதும் கவனிக்கவில்லை எனத் தெரிகிறது. அவரது நாடாகிய பாண்டி நாடும் அவரைப் பற்றிச் சிந்தித்திலது எனத் தோன்றுகிறது. இனிமேல் கிடைக்கக்கூடிய கல்வெட்டுகளில் இதைப்பற்றி ஏதேனுங் கிடைத்தாலும் கிடைக்கக் கூடும்.

---

# பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B A.]

## கூத்தன் (௧௮)

1. பண்டைத் தமிழ் மக்கள் கூத்தன் என்ற தமிழ்ச் சொல்லைக் கடவுளுக்கு இட்டு வழங்கி வந்தார்கள். அவர்கள் அப்படி அச் சொல்லை வழங்கி வந்ததற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி இக்கட்டுரையில் இயன்றவாறு கருதுவாம்.

2. கூத்தன் என்பது கூத்து என்ற சொல்லும் அன் விகுதியும் சேர்ந்து ஆகிய சொல். கூத்து என்பதனுடன் உடையான், பிரான், பெருமான் என்ற சொற்களைக் கூட்டுச் சொற்களாகச் சேர்த்துக் கூத்துடையான், கூத்தப்பிரான், கூத்தப் பெருமான் என்று கூறுதலுமுண்டு. கூத்து, குனிப்பு, ஆடல், நடம், நடனம் என்ற தமிழ்ச் சொற்கள் ஒரு பொருட் பன்மொழிகள். குனிப்பு என்ற சொல்லுடன் உடையான் என்ற சொல்லைச் சேர்த்துக் குனிப்புடையான் என்றும், ஆடல் என்ற சொல்லுடன் ஆன் என்ற உயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதி சேர்த்து ஆடலான் என்றும் பண்டைத் தமிழ்மக்கள் கடவுளுக்குப் பெயர்களமைத்து வழங்கிவந்தார்கள்.



3. தொடக்கநிலையில் கூத்து என்பது ஒருவர் தமது கால்கைகளையும் பிற உடலுறுப்புக்களையும் அசைத்து ஆடுதலாகும். அவ்வாறு ஆடுதல் கூத்தாடுதல் என்று சொல்லப் பெறுகின்றது. கூத்தாடுதலில் கால்களிரண்டும் எற்றமாயும், கைகளிரண்டும் காலாட்டத்திற் குறைந்தும், ஏனைய உறுப்புக்கள் கையாட்டத்திற் குறைந்தும் அசைக்கப் படுகின்றன. கூத்தாடுதலுக்கு அடிப்படையாயுள்ளது முயற்சி அசைவாகும் (vibration). கூத்தாடுஞ் செயலுக்குக் காரணமாயுள்ளது உள்ளக் களிப்பாகும். உலகக்கவலையாற் பற்றப்படாத சிறு குழந்தைகளும், சிறுவர் சிறுமிகளும், தங்களுடைய உள்ளத்திற் களிப்பு உண்டாகும்பொழுது தனித்தும் சேர்ந்தும் குனித்து ஆடி விளையாடுதலையும் சிறு பெண்கள் பாட்டுப் பாடிக் கும்மியடித்து விளையாடுதலையும் நாம் யாண்டும் பார்க்கிறோம்.

4. பல இடங்களில் வாழ்கிற குறவர் வேடர் முதலிய வகுப்புமக்கள் கல்வியறிவு இல்லாதவர்களாயிருந்தும் வேலையொழிவு நேரங்களிலும் விழாக்கள் கொண்டாடும் நாட்களிலும் தனித்தும் இருவர் கைகோத்தும் பலர் சேர்ந்தும் ஆடியும் குனித்தும் பாடியும் மகிழ்ந்து விளையாடுகிறார்கள். அவ்வாறு ஆடல் பாடல் செய்யுங்கால் அவர்களுடைய கால் கை உடல் அசைவுகளும் பாடல்களும் சிறுவர் சிறுமிகளுடைய ஆடல்களைப் போன்றிராமல் ஏறக்குறைய ஒன்றுக்கொன்று இணங்கினவைகளாய் (symmetrical) இருக்கும். மலை இடங்களுக்கு நாம் போனால் அங்கே இப்பொழுதும் அவர்கள் ஆடல் பாடல்கள் செய்து களித்து மகிழ்தலைக் காணலாம்.

5. சிறிது ஏற்றமாகத் திறன்வாய்ந்த கழைக் கூத்தாடிகள் உயரமான இரண்டு கால்கள் நட்டு அதனூடே கட்டப்பட்

டிருக்கிற கழை அல்லது கயிற்றின்மேல் நின்றும் நடந்தும் ஓடியும் கூத்தாடல் செய்து பார்க்கிறவர்களை மகிழச் செய்கிறார்கள். இன்னும் ஏற்றமான திறமையுடைய ஆடல்களைக் கற்றுப் பழகின களியாட்டாளர் (Circus players) மேற்சொல்லிய கழை அல்லது கயிற்றின்மேல் நின்று ஆடுதலுடன் விரைவாக ஓடுகிற குதிரைமேல் நின்றும் ஆடிப், பார்க்கிறவர்களை மகிழச் செய்கிறார்கள். இந்த ஆட்டக்காரர்கள் பாட்டுக்கள் பாடுவதில்லை.

6. மேற்கு நாடுகளில் ஆடவர்களும் பெண்களும் ஆடுதலைக் (dancing) கற்றுப் பயின்றுத் தனித்தும் கூட்டமாயும் திறமையுடன் தங்கள் உள்ளக் களிப்பை வெளிப்படுத்தியும் பார்க்கிறவர்களை உள்ளக் களிப்பை அடையச் செய்தும் ஆடல் புரிகின்றார்கள். அவர்களிற் சிலர் இந்த ஆடல் பாடல் செய்து பொருள் தேடுகிறவர்களாயு மிருக்கின்றார்கள்.

7. நமது தமிழ்நாட்டில் பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் இந்த ஆடல் பாடல்களை ஏனைய நாட்டு மக்களைப் பார்க்கிலும் மிக்க திறமையுடன் செய்யப் பழகி யிருந்தார்கள் என்பதைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களால் நாம் அறிகிறோம். கி.பி. இரண்டாவது நூற்றாண்டில் நடந்த சிலப்பதிகாரக் கதையில் கண்ணகியிருந்த இடைச்சேரியில் பலவகையால் கேடறிவிக்கும் நிமித்தங்கள் நிகழ, அதுகண்ட மாதரி முதலிய இடைச்சியர் கெட்ட நிமித்தங்களுக்குச் சாந்தியாகத் திருமாலைக் குறித்துக் குரவைக் கூத்து இசைப்பாட்டுடன் ஆடினார்கள் என்பது கூறப்பட்டுள்ளது. (சிலப். கள-வது ஆய்ச்சியர் குரவை). குரவையாவது எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்து ஆடுதல். மிகப் பழைய நூலாகிய புறநானூறு 22-வது பாட்டில் "சினமாந்தர் வெறிக்குரவை ஓத நீரிற் பெயர்பு பொங்க" என இக்குரவைக் கூத்து கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள் தங்கள் உள்ளத்திலுண்டாகின்ற ஒன்பது சுவைகளையும் (நவரசங்களையும்) கைக்குறி முகக்குறி கண்குறி மெய்க்குறிகளால் இசை தாளங்களுடன் பாடி ஆடிக் காண்பவர் கண்ணுக்கு இனிமையும்



கேட்பவர் காதுக்கு இனிமையும் பயக்கும்படிக் காட்டவல்ல திறனை அடைந்திருந்தார்கள். ஆடற் கலையானது (art of dancing) மேற்கு நாட்டில் உலகவாழ்வுக் களிப்புக்காக மட்டும் சில பகுதியினராற் பயிற்சி செய்யப்பட்டு வருதல்போலப் பண்டைத் தமிழ் மக்களாற் பயிலப்படவில்லை. அவர்கள் எல்லாரும் ஆடற் கலையை இயற்கையாக மக்கள் உள்ளத்தி லெழுகின்ற நகை முதலிய சுவைகளுடைய வெளிப்பாடுகளாக (expressions of inner emotional moods) அறிந்து பயின்று வந்தார்கள். அவர்கள் பயின்றுவந்த ஆடற் கலையானது உள்ளக்களிப்பை வெளிப்படுத்தற்கும் பிறரிடம் உண்டு பண்ணுவதற்கும் வழியாயிருத்தலுடன் உலக இன்பத்தை வெறுத்துக் கடவுளைச் சார்தலினாலுண்டாகும் பேரின்பத்தை அடைதற்கு ஆவலை உண்டாக்கும் வழியாயு மிருந்தது. ஆதலின் நாட்டியங்கள் (dancing) கோயில்களிற் செய்யப்பட்டு வந்தன. ஆடற்கலை பயின்றுவந்தது தமிழ்நாட்டுக் குலப்பெண்களே. மக்களெல்லாரும் அன்புணர்ச்சி வெளிபபாடுகளுக்கு (emotional expressions) உரியவராலும் பெண்மக்களே தங்கள் உடலமைப்பினாலும் மகப்பெறுதல், மகற்குப் பாலூட்டி வளர்த்தல் முதலிய அன்புச் செயல்களினாலும் அவ்வெளிப்பாடுகளுக்குச் சிறப்பாக உரியவர். ஆதலின் தமிழ்நாட்டுக் குலப்பெண்களே ஆடற் கலையைப் பயின்றுவந்தார்கள். மூவர் தேவாரங்களிலும் பெரிய புராணத்திலும் தமிழ்நாட்டுக் குலப்பெண்கள் அரங்குகளில் ஆடல் பாடல் பயின்றுவந்தார்கள் என்பது கூறப்பட் டிருக்கின்றது. தமிழ்மக்கள் அறிவு உணர்ச்சி செயல் வலிகளில் குன்றித் தாழ்ந்த நிலைமையை அடைந்தபொழுது குலப்பெண்கள் கல்வி பயிலாதிருந்ததுடன் ஆடற்கலையைப் பயிற்சிசெய்யாமலு மிருந்ததினால் பொருள்தேடும் வழியாக அக்கலை வேசைப்பெண்களாற் பயிலப்பட்டு வந்தது. தமிழ்நாட்டு வேசைப்பெண்கள் மாத்திரம் ஆடற்கலையைப் பிற்காலத்திற் பயின்றுவந்ததனால் கூத்தி என்ற சொல் வைப்பாட்டி என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களுக்கு இக் கல்விபயிற்றும் ஆசிரியர்கள் நட்டுவர் என்று கூறப்படுவார்கள். அவ் வேசைப் பெண்கள்

கோயில்களிலும் மண முதலிய சிறப்புகள் நடக்கும் வீடுகளிலும் நாட்டியம் சதிர் ஆடிப் பொருள் தேடி வந்தார்கள், அவர்களிடத்திலும் இப்பொழுது சில ஆண்டுகளாக நாட்டியக் கலைப் பயிற்சி அருகி வருகின்றது.

8. மேலே கூறிய கூத்தாடுதல் தூலத்தில் நிகழுஞ் செயல். அந்தச் செயலுக்குக் காரணம் மக்கள் உள்ளத்தில் நிகழும் களிப்பு அல்லது மகிழ்ச்சி. இந்தக் களிப்பு அறிவும் உணர்ச்சியும் (intellect and feeling) சேர்ந்து கலந்ததனாலுண்டாகிறது. கூத்தாடுஞ் செயல் செவ்விதாய் நடைபெறுதற்கு அறிவும் (intellect) உணர்ச்சியும் (feeling) உள்ளத்தில் சமமாயுள்ள நடுநிலையிலிருத்தல்வேண்டும். அறிவும் உணர்ச்சியும் கலந்து நடுநிலையில் நிற்றலினாலே உயரிய அன்பு உண்டாகிறது. உணர்ச்சி மிகுதியினால் ஆட்டமானது ஒழுங்கின்றிக் குதிக்கும் குதியாட்டமாய்விடும். அறிவு மிகுதியினால் கூத்தாடுஞ் செயல் நிகழாது. ஆகவே செவ்விதான கூத்தின்கண் அறிவும் உணர்ச்சியும் செயலும் ஒன்றுக்கொன்று இணங்கியுள்ள நடுநிலையில் (balance) இருத்தல் வேண்டும். அறிவு உணர்ச்சி செயல் (intellect, feeling & action) ஆகிய இந்த மூன்றும் சேர்ந்து நிகழாத செயல் உலகிலொன்றுமில்லை. இந்த மூன்றும் திருத்தமடைதலினாலேயே மக்கள் திருத்தமடைந்து சீரிய நாகரிகநிலை அடைகிறார்கள். இந்த மூன்றும் முழுமையும் திருத்தம் அடைந்து ஒன்றுபட்டுள்ள நிலையே வீட்டின்பத்திற்கு உரிய நிலையாகும். இந்தக் காரணத்தினாலே பண்டைத் தமிழ்மக்கள் தாங்கள் பயின்றுவந்த சீரிய செவ்விய கூத்தானது பேரின்ப நிலைக்கு வழியாயுள்ளது என்று அறிந்திருந்தார்கள்.

9. இதுகாறும் கூறியவாற்றால் கூத்துக்கு அடிப்படையான கருத்தானது கூத்து ஆடுகிறவர்கள் தங்கள் உள்ளத்திலுள்ள களிப்பை வெளிப்படுத்தலும் கூத்துப் பார்க்கிறவர்கள் தங்கள் உள்ளத்தில் களிப்பை அடைதலுமாகும் என்பது நன்கு விளங்கும். மக்களது உள்ளத்தில் உண்டாகும் இந்தக் களிப்புக்கு அதனிடத்தில் அடங்கி (latent) உள்



ளது எது? மக்களிடத்திலும் பிற உயிர்களிடத்திலும் தாங்கள் இன்பம் அடையவேண்டும் என்ற ஒரு வேட்கை (இச்சை) அடங்கியுள்ளது. அந்த வேட்கையே உள்ளக் களிப்பாய் வெளிப்படுதலுக்கும் அக் களிப்பினால் வெளிப்படும் கூத்துக்கும் காரணமாக அமைந்துள்ளது. உயிர்களிடத்தில் இன்பம் அடைதல் வேண்டும் என்ற வேட்கை எதனாலே உண்டாகிறது என்றால் கடவுள் மலத்தினாற் பிணிக்கப்பட்ட உயிர்கள் அம்மலத்தினிடமிருந்து விடுதலைபெற்றுத் தன்னை அடைந்து இன்பம் அடைதல் வேண்டுமென்று அவைகள்மேல் வைத்த பேரருளின் திறத்தினாலே தனது திருவுள்ளத்திற் கொண்ட நினைப்பினாலேயாகும். இந்த நினைப்பே அதிசூக்கும நடனமாகும். கடவுளாகிய சிவபெருமான் தன்னை விட்டுப் பிரியாதிருக்கின்ற அருட்சத்தியாகிய உமாதேவியாரோடும் உலகில் படைத்தல் முதலிய ஐந்தொழில்களும் தூலத்தில் நடைபெறுதற்குச் செய்யுந் திருநடனமானது தூலநடனமாகும். சிவமாகிய கூத்தனும் சத்தியாகிய கூத்தியும் சேர்ந்து உலகிலெங்கும் உயிர்களுடைய இதயத்திலும் நடம் செய்வதனாலேயே உலகில் எல்லா உயிர்களுக்கும் இன்ப வேட்கையும் அவ்வேட்கையை அடைதற்கு முயற்சியும் உண்டாகின்றன. "அவனசையாமலோரணுவும் அசையாது" என்ற முதுமொழி இக் கருத்தையே உரைக்கின்றது. நடனத்தைப்பற்றி இங்கே விரிப்பில் உரை பெருகும். சிவநெறியில் (சைவ சமயத்தில்) கூறப்பட்ட இந்த உண்மையை பண்டைத் தமிழ்மக்கள் அறிந்திருத்தலினால் அவர்கள் தாங்கள் வழிபட்ட கடவுளுக்கு மேலே கூறிய கூத்தை அல்லது நடனத்தைச் செய்கிறவன் என்ற பொருளில் கூத்தன் என்று பெயரிட்டு வழங்கி வந்தார்கள். இந்து சமயிகள் தவிர வேறு எந்த சமயிகளும் இந்த உண்மையை அறியாமையினால் கடவுளைக் கூத்தன் என்ற பெயரினால் அழைக்கவில்லை. பிற்காலத்தில் வடமொழிக் கலப்பு மிக்கு வந்தபொழுது தமிழ்மக்கள் நடம் என்ற தமிழ்ச் சொல்லுடன் இராஜன் என்ற வடமொழிச்சொல்லைச் சேர்த்துக் கூத்தனுக்குப் பதிலாக நடராஜன் என்ற கூட்டுச் சொல்லை மிகுதியாய் வழங்கி வருகிறார்கள். இப்பொழுதும்

கூத்தன் கூத்த நாயனார் என்ற பெயர்கள் தமிழ்மக்களில் ஆண் மக்களுக்கு இட்டு வழங்கப்படுகின்றன.

10. தமிழ்மறை நூல்களில் கணக்கற்ற பல இடங்களில் கூத்தன் என்ற சொல் கடவுளுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. அவைகளில் சிலவற்றை இங்கே காட்டுவோம்.

1. ஒற்றையேற துடையா னடமாடி யோர்பூதப் படைசூழ
திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகம் : திருவலிதாயம் 4 - வது பாட்டு.

2. கூத்தனுக் காட்பட் டிருப்பதன்றோ நந்தங் கூழைமையே
திருநாவுக்கரசர் தேவாரப்பதிகம் கோயில் திருவிருத்தம் 5-வது பாட்டு.

3. கூத்தனைக் குருமா மணி தன்னைக் கோலக்காவினிற் கண்டு கொண்டேனே
சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகம் திருக்கோலக்கா 4-வது பாட்டு.

4. தில்லைவாழ் கூத்தா சிவபுரத்தரசே
திருவாசகம் வாழாப்பத்து 4-வது பாட்டு.

5. குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி
திருவாசகம் திருக்கோத்தும்பி 3-வது பாட்டு.

6. தில்லைக் கூத்தனை யேத்தலர்போல்
திருக்கோவையார் 44-வது பாட்டு.

7. சிதம்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பத மாமந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
யற்புதக் கூத்தனை யாரறி வாரே,
திருமந்திரம் 2723-வது பாட்டு.

8. கூத்துக் கெல்லா மிவராடித் திரிவது.
பொன்வண்ணத்தந்தாதி 7-வது பாட்டு.

9. குழைக்கலையும் வடிகாதிற் கூத்தனா ரருளாலே
பெரியபுராணம் மானக்கஞ்சாற நாயனார் புராணம்-11-வது பாட்டு.

(தொடரும்)



# போர்க்கருவிகள் போந்த புதுமை

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

## வெடி மருந்து

வாணமருந்து என்றழைக்கப்படும் வெடிமருந்து எக்காலத்தில் எந்நாட்டில் யாரால் முதன்முதற் கண்டு பிடிக்கப்பட்டதென்பதை யாராய்ந்து தெளிதற்கியலவில்லை. ஆயினும் பல நாடுகளில் பன்னூற்றாண்டுகளாக அது கையாளப்பட்டு வருகிறது என்பது மறுக்கமுடியாததொரு உண்மையாகும்.

சிறுவர்களில் வெடிமருந்து செய்ய முயலாதவர்கள் சிறுபகுதியினரே என்று சொல்லலாம். தத்தமக்குத் தெரிந்த முறையில் தம்மாற் கூடியவரையில் ஒவ்வொரு நாட்டிலுள்ள சிறுவர்களிற் பெரும்பகுதியினரும் அதைச் செய்ய முயன்று, முயற்சிக்கேற்ற வெற்றியை யடைந்திருக்கின்றனர். அத்தகைய முயற்சியில் "குப்" என்று எரிந்து சுடுநாற்றம் வீசி, மட்டற்ற புகையைக் கிளப்பி, பொதுவாகக் கூறுங்கால் வேறு கெடுதி பயவாது செல்லும் "புஸ் வாணமே" மிகுதியென்று கூறவேண்டும். "கெடுதி பயவாது" என்று குறிப்பிட்டது எது கருதி என்றால் அச்சிறுவர்கள் தேர்ந்த முறையில் அதைச் செய்யாததினால் கெடுதியில்லையாயிற்று ஆதலினாலேயே. சரிவரமட்டும் அது செய்யப்படுமாயின் பெருங்கெடுதி பயவாமற் போகாதென்பது திண்ணம்.

வெடிமருந்து யாது?. வெடிமருந்து என்பது கரியும் கந்தகமும் வெடியுப்புஞ் சேர்த்தரைக்கப்பட்டதொரு கலவை. அக்கலவையை நீர்விட்டுப் பிசைந்து சிறு வில்லைகளாகத் தட்டி யுலரவைத்து அதன்பின் அவ்வில்லைகளைப் பொடிசெய்து கொண்டால் வெடிமருந்தாகும். வெடிமருந்தில் சேர்க்கப்பட்டுள்ள முப்பொருள்களின் அளவு நாடுதோறும் வேறுபடுகிறதாயினும் பொதுவாகக் கூறுமிடத்து முக்காற்பங்கு வெடியுப்பும், நூற்றுக்குப் பதினைந்து வீதம் கரியும், பத்திலொருபகுதி கந்தகமும் சேர்த்துக்கொள்வதே ஏற்ற அளவாகும் எனச் சொல்லலாம்.

இனி, வெடிமருந்து எவ்வாறு எரிந்து வெடிக்கிறதென்பதை யாராய்வாம். கணப்புச்சட்டி எரிய விடுதல் என்று வழக்காற்றில் கூறக் கேட்டிருக்கலாம். கணப்புச் சட்டி. எரிந்தால் சூடு உண்டாவானேன் ? விறகு, நிலக்கரி முதலியவற்றிலுள்ள கரிச்சத்து அவை எரியுங்கால் காற்றிலுள்ள உயிர்வளியுடன் கலந்து "கரிப்புளிப் புகை"யாக மாறுகிறது. மாறிய இப்புகை காற்றுடன் கலந்து எளிதில் வெளியிற் சென்று விட்டாலும் கணப்புச் சட்டி யிருக்குமிடத்தில் சூடு உண்டாயிருக்கக் காண்கிறோம். ஆதலால் இச்சூடு விறகு நிலக்கரி முதலியவற்றில் இயல்பாகவே அமைந்திருக்கவேண்டும் என்றே கொள்ளக்கிடக்கிறது. ஆனால் விறகையோ கரியையோ தொட்டால் சூடு தெரிகின்றதோவெனில், இல்லை. அவை எரிவதினால் அவற்றின் கண்ணுள்ள கரிச்சத்து உயிர்வளியுடன் கலப்பதினாலேயே சூடு பிறக்கின்றது. கணப்புச்சட்டி யெரிய விடுவதின் நோக்கம் சூடுண்டாக்குதலேயன்றிக் "கரிப்புளிப் புகை" பெறுவதில்லையென்பது கருதியேதான் அதைக் 'கணப்புச் சட்டி' என முன்னோர் அழைத்து வந்தனர்போலும். கணப்பு என்பது சூட்டைக் குறிக்கும் சொல்லன்றோ ?

நிற்க, கரிச்சத்து உயிர்வளியுடன் கலந்தால் சூடு பிறக்கிறதென்பது சரியேயாயினும் ஏன் அது அவ்வாறு கலத்தல் வேண்டும் என்று கேட்கலாம். அக்கேள்விக்கு எளிதாக விடைகூறி விளக்க முடியாது. வைக்கோலையும் நெருப்பையும் ஒரே இடத்தில் இருக்கவிட்டால் எப்படி வைக்கோலில் நெருப்புப் பிடிப்பது இயற்கையோ அப்படியே கரிச்சத்தும் உயிர்வளியும் ஒரே யிடத்தில் இருக்கப்பெறுங்கால் பின்னது முன்னதுடன் சென்று கலத்தலும் இயற்கையாக இருக்கிறது என்றுதான் கூற முடியும். ஆயினும் கரிச்சத்தும் உயிர்வளியும் கலப்பதற்கு ஒரு சிறிது நெருப்பு இன்றியமையாது வேண்டப்படும்; ஏனெனில் எரிந்தால்தான் கரிச்சத்து உயிர்வளியுடன் கலத்தலுறும்.

இனி, கரிநெருப்பு "நின்று" எரிகிறது என்று கூறக் கேட்டிருக்கலாம். அதாவது அது மெதுவாக எரிகிறது என்பதே அதற்குப் பொருள். அஃதேனெனின் கரிக்கட்டிகளின் மேற்புறத்தில்தான் கரிச்சத்து உயிர்வளியுடன் கலக்கும் வசதியுடைத்தாக விருக்கிறது. அவ்வாறின்றிக் கரிக்கட்டிகளை யுடைத்துத் தூள் செய்து விட்டாலோ அத்தூள்கள் நெருப்பூட்டப்பட்டவிடத்து உயிர்வளியுடன் கலக்க எளிதில் வசதியுற்று எரிகின்றன. எரிவதனோடு மட்டுமன்றிப் புல்லிய ஓசையுடன் அத் தூள்கள் வெடிக்கவுங் கேட்கலாம். நிலக்கரிச் சுரங்கங்களில் அடிக்கடி விபத்து உண்டாவது இவ்வாறேதான். இதை இருப்புப்பாதை எஞ்சினில் கரி தள்ளுவோன் மண்வெட்டி போன்ற கரிதள்ளும் கருவியாற் கரியை யெடுத்து நெருப்பிற் போட்டுவிட்டு அக்கருவியை நெருப்பின்மீது உதறும்போது அதிலொட்டியிருக்குங் கரித்தூள்கள் சடபடவென வெடிக்குங்காலுங் காணலாம். எனவே வெடியுண்டாக வேண்டுமானால் விறகு அல்லது கரியும், அதிலுள்ள கரிச்சத்து ஒரே காலத்தில் எரிந்து வெடிப்பதற்கு உயிர்வளிக் கலப்பும் இன்றியமையாது வேண்டப்படும் என்பது பெறப்பட்டது.

எடுத்துக்கொண்ட பொருளாகிய வாண மருந்து அல்லது வெடி மருந்தில் இவை இருக்கின்றனவா என்று பார்த்தால் இருக்கின்றனவென்பது தெரியும். எப்படியெனில், கரித்தூளிற் கரிச்சத்தும், வெடியுப்பில் உயிர்வளியும், இவற்றுடன் விரைவில் எரியும் பண்புடைய கந்தகமும் இருக்கின்றன. எனவே உயிர்வளிக்காகக் காற்றைத் தேடிச்செல்ல வேண்டுவதில்லை. வெடியுப்பிலேயே அது இயற்கையாகச் சேமித்து வைக்கப் பட்டிருக்கிறது. அன்றியும் வெடிமருந்து தூள் செய்யப் பட்டிருத்தலால் ஒவ்வொரு கரித்தூளுக் கருகிலும் கந்தகத்தூளுக் கருகிலும் வெடியுப்புத் தூளிருந்து வேண்டுங்கால் உயிர்வளியை யளிக்கவு மேதுவாகிறது.

வெடியுப்பில் உயிர்வளியேயன்றி ஒரு பகுதி தீவளியுமிருக்கிறது. வெடிப்பதற்கு உயிர்வளிமட்டுமே சாலுமாயினும் தீவளியில்லாக்கால் உயிர்வளி விரைவில் வேலை செய்யாதாகையால் ஒரு சிறிது தீவளியும் வேண்டப்படும். இத் தீவளியை ஒரு விந்தையான பொருளென்றே கூறவேண்டும். சோம்பலே உருவாயமைந்த இயற்கைப்பொருள் ஒன்று உண்டென்

ருல் அது தீவளிதான். ஏனெனில் அது தானே இயங்கிப் பயன்படுவ தென்பதில்லை. ஆயினும் தன்னைச் சேர்ந்த பொருள்களை, அதிலுஞ் சிறப்பாக உயிர்வளியை, அது வேலை செய்யு மாறு தூண்டுவதுபோல் வேறெதுவுந் தூண்டுவதில்லை. இதர பொருள்கள் சேர்ந்த ஒரு கலவையில் ஒரு சிறிது தீவளியைப் புகவிட்டால் ஏதாவதொரு தடபுடல் உண்டாகாம லிருக்காது. எனவே வெடியுப்பில் தீவளியும் இயற்கையா யமைந்திருப்ப தனலேயே அதன் பயனை யொருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

ஆகவே, வெடிமருந்தை யொருசிறிதெடுத்து அதில் தீமூட்டினல் கரிச்சத்தும் உயிர்வளியும் ஒன்றுடனென்று கலத்தற்குரிய தகுதி முதற்கண் உண்டாகிறது; அத்தகுதி யுண்டானதும் வெடியுப்பிலுள்ள தீவளி தன்னுடனுறையும் உயிர்வளியை உடனே சென்று கரிச்சத்துடன் கலக்குமாறு ஒரு சவுக்கடி கொடுக்கிறது. அவ்வடிபெற்ற உயிர்வளி சுருக்கெனக் கரிச்சத்துடன் சென்று கலக்கவே "குப்"பென வெடிமருந்து எரிகிறது. அவ்வாறு எரிவதனல் வெடிமருந்து முன்னிருந்த எடையைப் போன்று 2500 மடங்கு எடை கொண்டதாக மாறி விடுகிறது; அதாவது ஒரு அங்குல கனமுள்ள வெடிமருந்து "குப்"பென எரிந்தால் 2500 அங்குல கனமுள்ள புகையாக மாறுகிறது. இவ்வாறு ஒன்று இரண்டாயிரத்தைந்நூறு மடங்காக விரைவில் வீக்கமுறுவதால்தான் வெடியுண்டாகிறது. ஆனல் இவ்வெடியினல் ஓசை உண்டாகவேண்டுமானல் வெடிமருந்து அடைப்பான ஒரு இடத்தில் அதாவது குழாய், குண்டு போன்ற உருவமுள்ள அடைப்பான பொருளில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வடைப்பான பொருள் துப்பாக்கி போன்ற வலிவுள்ளதாக இருக்குமானல் ஒன்று இரண்டாயிரத்தைந்நூறுமடங்காக மாறுமென்று மேற்கூறிய புகை, அவ்வாறு தான் பெருக்கமுறுவதற்கு வேண்டிய இடம் அத் துப்பாக்கிக் குழாயினுட் கிடைக்கப்பெறுமையால், 40 டன் வேகங்கொண்டு அழுத்தித் தள்ளும் ஆற்றலுடைத்தாக மாறி வெளிக்கிளம்ப முயலுகிறது. அம் முயற்சியால் துப்பாக்கிக்குள் கெட்டிக்கப்பட்டிருக்கும் குண்டை அது 40 டன் வேகத்துடன் வெளியே



அழுத்தித் தள்ளுகிறது. எனவே, இதுகாறுங் கூறியவாற்றல், வெடி மருந்து எவ்வாறு செய்யப்படுகிறது என்றும், எதனல் எரிகிறது என்றும், ஏன் வெடிக்கிறதென்றும், துப்பாக்கிக்குள் வெடிப்பதனல் எவ்வாறு அது குண்டுகளைத் தள்ள உதவுகிறதென்றும் ஒருவாறு விளக்கப்பட்டது.

---

# சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்]

## இரண்டாவது சூத்திரம்

### நாலாவது அதிகாணம்

86. சூத்திரத்திற் கூறியபடி நாலாவது அதிகாணத்தின் மேற்கோள் " ஆணையி னீக்கமின்றி நிற்கும் " என்பது. ஆசிரியர் இம்மேற்கோள் உரையில் தொக்கி நின்ற முதல்வன் என்ற எழுவாயை வருவித்தும் ஆணை என்ற சொல்லை " ஆணையாகிய சிற்சத்தி " என விளக்கியும் "நீக்கமின்றி நிற்கும்" என்ற சொற்றொடருக்கு " சமபேதமாய் நிற்பன் " என வடமொழிப் பதங்களை வழங்கியும் முதல்வன் தனதாணையாகிய சிற்சத்தியோடு சமபேதமாய் நிற்பன் என அதிகாண மேற்கோளைக் கூறினர்.

87. சூத்திரத்தில் நீக்கமின்றி நிற்குமன்றே என்ற சொற்றொடருக்குமுன் அணிமையில் நின்ற 'ஆணையின்' என்பது முன் இரண்டாவது அதிகாணத்தில் இருவினையின் என்பதனேடு சேர்ந்து நின்று பொருடந்ததுமன்றிச் சிங்க நோக்காய் நீக்கமின்றி நிற்கும் என்பதனேடு இயைந்தும் பொருள் தருகின்றது. ஆணையின் என்பதிலுள்ள இன் உருபு ஐந்தாவது வேற்றுமை உருபாய் நீக்கப்பொருள் தந்து நிற்கிறது. ஆணையின் என்பது ஆணையிலிருந்து அல்லது ஆணையைவிட்டு என்று பொருள்படும். ஆணை என்ற சொல் அருள்வலியை (அருட்சத்தியை)க் குறிக்கிறது. அது 'ஆற்றல்' அல்லது 'சிற்சத்தி' என்றும் கூறப்படும். சமபேதம் என்னும் வடமொழி நன்

றாய்ச்சேர் என்று பொருள்படுகிற சமவே (समवे) என்ற அடிச்சொல்லிலிருந்து வந்தது. சமபேத (समवेत) என்பது சமவே (समवे) என்ற வினைச்சொல்லிலிருந்து வந்த இறந்தகால வினையெச்சச்சொல் (Past participle). சமபேத (समवेत) என்பதிலிருந்து சமபேதம் என்று தமிழ் மொழியில் வழங்கப்படுகின்றது. சமபேதம் என்ற வடமொழிச் சொல்லின் பொருளை ஆசிரியரே "நீக்கமின்றி நிற்றல்" என்று சூத்திரத்திற் கூறியுள்ளார். நீக்கமின்றி நிற்றல் கலப்பினால் உண்டாகிறது. கலப்பினால் நீக்கமின்றி நிற்றலாவது முதல்வனும் அவனது அருள்வலியும் ஒருபொருள் என்றாவது இருபொருள்கள் என்றாவது பிரித்தறியவாராது கலந்து இவ்விரண்டிற்கும் பொதுவாய் நிற்றலாகும்.

88. ஆசிரியர் மூன்றாவது அதிகரணத்தில் உயிர்கள் மாறிப் பிறக்கும் எனக்கூறி அவ்வாறு உயிர்கள் மாறிப்பிறத்தலை அவைகள் செய்த வினையின் பயனைக் கூட்டுவிக்கும் அருள்வலியினின்றும் முதல்வன் நீக்கமின்றி நிற்பன் என நாலாவது அதிகரணத்திற் கூறுகின்றார். இதனால் மூன்றாவது அதிகரணத்துக்கும் நாலாவது அதிகரணத்துக்குமுள்ள இயைபு விளங்கும்.

89. இந்த அதிகரணத்தின் மேற்கோட் பொருளுக்கு எதிரிடையான கொள்கைகள் இரண்டு உள. முதல்வனும் அருள்வலியும் இருவேறு பொருள்கள் என்று கூறும் மீமாம்சகர் முதலியோர் கொள்கை ஒன்று. முதல்வனும் அருள்வலியும் வேறு அன்றி ஓரே பொருள் என்று கூறும் நையாயிகர் முதலியோர் கொள்கை மற்றொன்று. இவ்விரண்டு கொள்கைகளினால் மாணாக்கருக்கு உண்டாகும் ஐயப்பாடு நீக்குதற் பொருட்டு ஆசிரியர் நாலாவது அதிகரணம் கூறுகின்றார்.

90. இந்த அதிகரணத்தின் மேற்கோளுக்கு முதலாவது அதிகரணம் மேற்கோளாகிய "அவையே தானேயாய்" ஏதுவாக அமைந்துள்ளது. முதல்வன் எல்லாப் பொருள்களோடும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் கலந்துநிற்பதே எங்கும் நிறைந்த தன்மை (சர்வ வியாபகத்துவம்) ஆகும். அவ்வாறு



ஆசிரியர் முதலாவது அதிகரணத்திற் கூறிய எங்கும் நிறைந்த தன்மையையே இங்கு நாலாவது அதிகரணம் மேற்கோளுக்கு ஏதுவாகக் கூறுகின்றார். ஆனால் அந்த ஏதுவாகிய சர்வவியாபியாய் நிற்றலுக்கு( எங்கும் நிறைந்து நிற்றலுக்கு) அடைமொழிகளாக "ஏகாநேக மிரண்டு மின்றி" என்ற சொற்றொடரைச் சேர்த்துக் கூறுகின்றார். ஏகாநேகம் என்ற சொற்றொடர் பிரிக்கப்படுங்கால் ஏகம் அநேகம் என இரண்டு சொற்களாய்ப் பிரியும். ஏகம் அநேகம் இரண்டு மின்றி என்பது முதல்வனும் அவனினின்றும் பிரித்தறியவாராத அருளும் ஒரு பொருள் என்றாவது, முதல்வன் தன்னுடன் வேறின்றிக் கலந்திருக்கிற அருளுடன் எல்லாப் பொருள்களிலும் ஒன்றி நிற்றல்பற்றி அநேக பொருள்கள் (பல பொருள்கள்) என்றாவது நாம் சொல்ல வொண்ணாது என்பதாம். ஒருபொருளென்று (ஏகம்) சொல்லுவோமானால் ஒருபொருள் ஓரிடத்திலிருக்குமேயன்றி எவ்விடத்திலும் நிறைந்திருக்க முடியாது. கதிரோன் தன்னினின்றுபிரிக்க வொண்ணாத ஒளியினால் எங்கும் நிறைந்திருத்தல் போல முதல்வனும் தன்னைவிட்டுப் பிரிக்க வொண்ணாத அருள்வலியால் எங்கணும் நிறைந்திருத்தல்பற்றி முதல்வனும் அருள்வலியும் இரண்டு பொருள்கள் என்று நாம் சொல்வோமானால் இரண்டு பொருள்கள் இரண்டு இடங்களிலிருத்தலன்றி எவ்விடத்தும் நிறைந்திரா. அதுவன்றி முதல்வன் தனது அருள்வலியினின்று இரண்டாக வேறுபட்டுக் கலந்து நிற்பானானால் அவன் எல்லாப் பொருள்களிலும் வேற்றுமையின்றி (அபேதமாய்)க் கலந்திருத்தல் சாலாது. அவன் பல பொருள்களிலும் வேற்றுமையின்றிக் கலந்திருத்தல் பற்றி அவனை அநேகன் என்று நாம் சொல்வோமானால் அவன் அப் பல பொருள்களினும் வேறாய் நிற்பனே அல்லாமல் சூத்திரத்தின் முதல் அதிகரணத்தில் கூறியபடி அவைகளுடன் ஒன்றாயும் உடனாயும் நிற்றல் முடியாது. முதல்வனை அவ்வாறு கூறுதலும் அவனுடைய எங்கும் நிறைந்த தன்மைக்கும் முழுமுதற் றன்மைக்கும் இழுக்காய் முடியும். ஆதலின் ஆசிரியர் முதல்வன் ஏகாநேகமிரண்டு மின்றிச் சர்வ வியாபியாய் நிற்றலை அதிகரண

மேற்கோளுக்கு ஏதுவாகக் கூறினர். முதல்வன் தனது அருட் சத்தியோடு வேற்றுமையின்றி ஒரு பொருளாயும் வேற்றுமை யுடன் இரண்டு பொருளாயும் நிற்றலின்றி வேற்றுமையும் வேற் றுமை யின்மையும் இல்லாமல் அவ்விரண்டிற்கும் பொதுவாய் எங்கும் நிறைந்து நிற்பன் என்பது இம்மேற்கோளின் பொரு ளாகும்.

91. முதல்வனும் அருள்வலியும் வேற்றுமையின்றி ஒரு பொருளாயும் அல்லது வேற்றுமையுடன் இரண்டு பொருள்க ளாயும் அல்லாமல் இரண்டுக்கும் பொதுவாய் நிற்றல் யாங்ஙன மெனின், இதன் உண்மைத் தன்மை முதல்வனுடன் வேறற ஒன்றி நின்று, மலப்பிணிப்பு முற்றும் நீங்கி, அவனது அருளி னால் உணரும் பெரியோர்கள் உணரலாமே அன்றி மலப்பிணிப்பு உடைய நம்மனோரால் வாயினாற் கூறப்படுந் தன்மையுடைத் தன்று. அது நம்மனோரால் சில ஏதுக்கள் வாயிலாக எதிர் மறைத் தன்மையில் (negative aspect) இவ்வாறு இருக்கும் என்று மாத்திரம் ஊகித்து அறியப்படுந் தன்மை உடையது.

92. திருவாசகம் சிவபுராண அகவலில் "ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க" என்னும் அடியின்கண் இறைவனை ஏகன் அநேகன் என்று கூறியதனோடு "ஏகானேகமின்றி" என்று இங்கே கூறியது முரணாதோ எனில் முரணாது. உண்மை நிலையில் ஒருவனாயிருக்கும் முதல்வனை பொது நிலையில் (தடத்த நிலையில்) உலகிலுள்ள பல சமயத்தார்களுக்கும் அருள்புரிதற் பொருட்டு பல உருவங்களை உடையவன் என்ற உண்மை சிவ புராண அகவலிற் கூறப்பட்டுள்ளது. இங்கே பொது நிலையில் முதல்வன் ஐந்தொழில் செய்தற்கண் தனக்கும் அருள்வலி யாகிய முதல்விக்கும் உள்ள நெருங்கிய தொடர்புநிலை கூறப் படுகின்றதாகலின் அதனோடு முரணாமை அறிக.

93. அழிப்புக் காலத்தில் அருட்சத்தி முதல்வனாகிய சிவனிடத்தி லொடுங்கி, அந்த அருட்சத்தியுடன் எல்லா உயிர்ப் பொருளும் உயிரில் பொருளும் அவனிடம் ஒடுங்கி நிற்பச், சிவன் ஒரு பொருளாய்த் தனித்து நிற்பன். படைப்புக் காலத் தில் அருட்சத்தி சிவனிடமிருந்து பிரிந்து விரியும் பொழுது



ஒடுங்கின எல்லாப் பொருள்களும் அவ்வருட்சத்தியினிட மிருந்து தோன்றுகின்றன. அருட்சத்தி சிவனிடமிருந்து பிரிந்து விரிந்த காலத்திலும் சிவம் தனித்து வேறாகியும் அருட் சத்தி தனித்து வேறாகியும் நிற்றலில்லை. சிவத்தில் அருட்சத்தி யும் அருட்சத்தியில சிவமும் கலந்து உள்ளன. இந்த அருட் சத்தியையே பெண் வடிவாகிய உமாதேவி என்று சிவநெறி நூல்கள் கூறும்.

"பைங்கொடி யாளும் பரமனிருந்திடத்
திண்கொடியாகத் திகழ்தரு சோதியாம்
விண்கொடியாகி விளங்கி வருதலாற்
பெண்கொடியாக நடந்த துலகே"

என்று திருமூல நாயனார் திருமந்திரத்திலும் "கோலமா மங்கை தன்னைக் குறித்தொரு கோலமாய் சீலமே அறிய மாட்டேன்" என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாவடுதுறைத் திருநேரி சைத் தேவாரப் பதிகத்திலுங் கூறியிருத்தல் காண்க. படைப் புக் காலத்தில் அருட்சத்தியாகிய உமாதேவியார் சிவனிட மிருந்து பிரிந்து நிற்குங்கால் உமாதேவியார் சிவன் விளங்கு தற்கு உருவமாயிருக்கின்றாள். "உமையலா துருவமில்லை...... ஐயனை யாறனார்க்கே" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திரு ஐயாற்றுத் தேவாரப் பதிகத்திலும் "உருவாருமையோடே னானன்" என்று திருஞான சம்பந்த சுவாமிகள் திரு அண்ணா மலைத் தேவாரப் பதிகத்திலும் இக்கருத்தைக் கூறி யருளினார்கள். சிவன் அறிவு உருவனாகியும் உமாதேவியார் அவனுடனியைந்து நின்று தொழில் செய்தலினாலேயும் படைப்பு முதலிய ஐந் தொழில்கள் நடைபெறுகின்றன. ஐந்து தொழில் செய்யச் சிவன் உமாதேவியாரோ டியைந்து நிற்குங்கால் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பன். இக்கருத்தைத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருநல்லூர்த் தேவாரத்தில் "ஏறிலெரு தேறு மெழிலா யிழையோடும் வேறுமுடனுமாம் விகிர்தாவ ரென்ன" என்று கூறியருளினார். இவ்வாறு முதல்வனாகிய சிவன் உமா தேவியாரோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் அத்துவிதமாய்க் கலந்திருத்தலின் வழியாக அவன் இச்சூத்திரம் முதலாவது

அதிகரணத்திற் கூறியபடி உயிர்ப் பொருளோடும் உயிரில் பொருளோடும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கின்றான். அவன் உயிரில் பொருளோடு அத்துவிதமா யியைந்து நிற்கும் இயைபினைப் பார்க்கிலும் உயிர்ப் பொருளோடு அத்துவிதமாய் இயைந்து நிற்கும் இயைபு நெருங்கியதா யுள்ளது; அவன் உயிர்ப்பொருளோடு அத்துவிதமாய் இயைந்து நிற்கும் இயைபைப் பார்க்கிலும் உமாதேவியாரோடு அத்துவிதமாய் இயைந்து நிற்கும் இயைபு மிக நெருங்கியதாயுள்ளது. (தொடரும்)

---

# கருமை

[திருக் கபசம் எழுதியது]

(௲௬-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தெழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுமவற்றுள் நகரத்தையும் மகரத்தையும் பற்றிச் சில மொழிந்தோம். இனி மூன்றாமெழுத்தாகிய சிகரம் பற்றிச் சில நவின்று இக் கட்டுரையை முடிக்க விரையுதும். 'சிவ்வெழுத்தே தெய்வ ருத்திரனும்' என்று காட்டிய மேற்கோளையும், 'சிவ்விரண்டு தோளதாய்' என்று கூறப்பட்டதையும் நினைவிற் கொணர்வோமாயின், சிகரம் சிவனுக்கிடமா யிருப்பதும், அது தோள் முதலிய புறக் கருவிகளையும், மூச்சுப்பை (Lungs) நெஞ்சுப்பை (Heart) முதலிய அகக்கருவிகளையுங் குறிப்பதும் செவ்வனம் அறியலாகும். மகரமாகிய வயிற்றிற்கு மேலுங் கழுத்திற்குக் கீழுமுள்ள மெய்ப் பகுதியே சிகரத்தாற் காட்டப்படுகின்றது. சகரத்தை எழுதிய பின் அதைச் சிகரமாக்குதற்குக் கீறப்படும் வரி தோளிலிருந்து இறங்குகின்ற கையை யொத்திருப்பது காணத்தக்கது. நகரமும் மகரமும் வலமிடமாகப் பிரிக்கப்பட்டவாறே சிகரமும் பிரிக்கப்பட வேண்டும். நகரம் நிலத்தையும் மகரம் புனலையுஞ் சுட்டியவாறு சிகரம் நெருப்பைக் குறிக்கும்.

ஐம்பெரும் பகுதிகளுள் நிலம், நீர் என்ற பருப்பொருள்களுக்குப் பின் நெருப்பைக் கொண்டுவருவது இயல்பேயாம்.



நிலத்தையு நீரையும்போல் தீ அத்துணைத் திண்ணியதன்று; காலையும் வானையும்போல் அத்துணை நுண்ணியதுமன்று. நீரிலிருந்து நிலந் தோன்றிற்றென்பது பழைய கொள்கை. இது தெரித்தற் பொருட்டு நீரிற் கிடக்கின்ற மாயோனது உந்தித் தாமரையினின்றும் நிலத்தோனாகிய அயன் வெளிப்பட்டானென மொழிப. நெருப்பினால் நீர் விளைந்ததென்பதும் பண்டிருந்தோர் கொள்கையாம்.

"கருவளர் வானத் திசையிற் றோன்றி
யுருவறி வாரா வொன்றனூழியு
முந்துவளி கிளர்ந்த வூழூ ழூழியுஞ்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தண்பெய றலைஇய வூழியு மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கு
முள்ளீ டாகிய விருநிலத் தூழியும்"
(திருமால்—இரண்டாம் பரிபாடல்—5-12 வரிகள்.)

என்று கூறப்பட்டிருப்பது கொண்டு இஃதறியப்படும். ஈண்டு ஊழி என்பதற்கு நிலை (Stage) என்று பொருள் தருவது நன்றெனத் தோன்றுகின்றது. மேற்காட்டிய அடிகளுக்கெழுதிய உரையின்கீழ், "பரம்பொருளினின்றும் ஆகாயந் தோன்றி, அதனின்றுங் காற்றுத் தோன்றி, அதனின்றுந் தீத்தோன்றி, அதனின்றும் நீர் தோன்றி, அதனின்று நிலந்தோன்றிற்றென்று வேதத்துள்ளும் கூறப்பட்டது" என்று பரிமேலழகர் குறித்துளார். நுண்ணியவற்றிலிருந்து பருப்பொருள்கள் தோன்று முறை யிங்கு விரிக்கப்பட்டது. நிலம், நீர் என்பவற்றிற்குப் பின் நெருப்பு வரவேண்டிய ஒழுங்கை இதனால் தெள்ளிதிற் காணலாம். நெருப்பிற்கும் சிவனுக்குமுள்ள கேண்மையை இறந்த பகுதிகளில் விரிவாக விளக்கினோம். ஈண்டு வேறொரு முறையில் அதைத் தொடர்வாம்.

நெஞ்சப்பை, மூச்சுப்பை முதலிய அகக்கருவிகளும், கைகளாகிய புறக்கருவிகளுங் கூடிய உடற்பகுதியை நெருப்பிற்குஞ் சிவனுக்கும் இடமாகக் கொண்டதன் இயைபை முதலில்

நோக்குவாம். இரவு, பகல்; தூக்கம், இயக்கம்; வாங்குமாற்றல், பாயுமாற்றல் என்று நாம் முன் கண்டவற்றில் பகல், இயக்கம், பாயுமாற்றல் ஆகிய மூன்றும் ஒன்றிச் சிவனைச் சாருமென்பது காட்டப்பட்டது. இயக்கமுண்டாக்குங் கருவிகளாய கைகளிருக்கும் உடற்பகுதியைச் சிவனாரோடு சேர்த்தல் பொருந்தும் ஆனால், நெருப்பிற் கிடமாய் இப்பகுதியைக் கொண்டதற்குக் காரணம் வேண்டும். அஃதென்னை?

எரிதல் என்னுந் தொழில் நிகழ்வதற்கு இன்றியமையாதது காற்றிலுள்ள உயிர்வளி (Oxygen) யாகும். காற்றில்லாவிடத்து எரிதல் இல்லை. உடலிற் காற்று நடமாடுமிடம் நெஞ்சன்றோ? நெஞ்சிற் காற்று வருவதும் போவதும் எற்றிற்கென்றறிந்தவர்க்கு, நெஞ்சிற் சிவனை நிறுத்தியதன் காரணம் வெளிப்படாமற் போகாது.

வயிற்றிற் செல்கின்ற உணவு சாறாகவுஞ் சக்கையாகவும் பிரிந்து போகின்றது. சாறு குருதியோடு கலக்கச் சக்கை எருவிடு வாயிலால் வெளிப்படுகின்றது. உணவின் பகுதியாகிய அழுக்கு இங்ஙனம் எளிதில் தள்ளப்படுமாயினும் குருதியொடு ஒன்றி நிற்கும் நுண்ணிய மலம் இந்த முறையில் நீங்காது. இதை எரித்துத்தான் வெளிப்படுத்தல் வேண்டும். மலத்தை எரித்துத் தொலைப்பவனாகிய சிவன், உடலில் இந்நிகழ்ச்சி நடைபெறும் இடத்தொடு சிவணி நிற்பது ஏற்புடைத்தென்பதைத் தெரிவிக்கவே, மூச்சுப்பையும் நெஞ்சுப்பையு மிருக்குமுடற்பகுதியில் அவனுக்கிடம் வகுக்கப்பட்டது. முப்புர மெரி செய்தவதனால் மும்மல நீக்கமன்றோ காட்டப்பட்டது?

நோய்கள் தோன்றுவதற்குக் காரணம் குருதியில் அழுக்கு அல்லது கிருமிகள் மிகுவதேயாம். உடலை வருத்தும் நோய்க்குக் காரண மிதுவாதற் போலவே, உயிரை வாட்டும் பிணிக்குக் காரணம் மலமென்றறிதல் வேண்டும். நெஞ்சப் பையிலிருந்து புதிய இரத்தம் நரப்புக் குழாய்களின் வழியாக உடலெங்குஞ் சென்று ஆங்காங்குள்ள அழுக்குகளைப் பற்றிக்கொண்டு வேறு குழாய்களின் வாயிலாய் மூச்சுப்பைக்கு வந்து சேருகின்றது.



ஈண்டு நாம் முகர்கின்ற காற்றிலுள்ள உயிர்வளி, இரத்தத்திலுள்ள மலத்தொடு புணர்ந்து கரிமலவளியாகி (Carbon-di-oxide) வெளிப்படுகின்றது. மலங்கழிந்த செந்நீர் மறுபடியும் நெஞ்சப்பையுட் சென்று, ஆண்டிருந்து முன்போல் உடலெங்கும் பரவுகின்றது. இங்ஙனம் நடைபெறுகின்ற சுற்றியக்கம் (Circulation) இடையூறின்றி நிகழுமாயின் உடம்புக்குக் கேடில்லை. மலத்தொடு உயிர்வளி பொருந்துங்காற் சூடுண்டாகிறது. இஃது எரிதலாற் பிறக்கின்ற சூடு. நாம் உள்ளே வாங்குகின்ற காற்றைவிட வெளியே செலுத்துகின்ற காற்று வெப்பமுடையதாயிருப்பது கொண்டு இதை யறிந்துகொள்க. நெருப்பிற்குஞ் சிவனுக்கும் நெஞ்சைவிடச் சிறந்தவிடம் வேறுண்டுகொல்!

இஃதன்றித் தில்லையில் திருக்கூத்து நடப்பது மூச்சு வாங்குவதும் விடுவதுமாகிய தொழிலொடு பொருந்தியதென்று சொல்லப்படுகிறது. புறத்தில் தில்லை அகத்தில் நெஞ்சையொத்தது என்று ஓர் உரையும் உண்டு. இதுபற்றிக் கோவில் எனுஞ் சொல் தில்லைக்குச் சிறப்பாக வழங்கப்படும். உள்ளும் புறமும் நடக்கின்ற இயக்கமே சிவனது கூத்தென்பது உணரற்பாலது.

இயக்க மில்லாவிடின் வையகம் நாற்ற மெடுத்துப்போம். ஓடாது கட்டுப்பட்ட நீர்நிலையிற் புழுக்கள் தோன்றி நாற்ற மெடுப்பதை யறியார் யார்? உயிருந் தான் தோன்றிய விடத்திற் கிடந்து, அண்மையிலிருப்பவற்றிற் படிந்து வாளாவிருக்குமாயின், மலத்திற் சிக்கி இருள் வாய்ப்படும்.

இருளுந் தூக்கமும் ஒன்றுமாறு ஒளியும் இயக்கமும் ஒன்றும். தூக்கத்தை (சுகத்தை) விரும்பும் உயிர் ஒளியை விட்டு விலகுவது திண்ணம். இயக்கமென்பது புடைபெயர்ச்சி யாதலால் அதற்கு முயற்சி வேண்டும். முயற்சி, பயிற்சி என்பன கீழிருந்து மேலேறுதற் கின்றியமையாதனவாம். எத்துறையினும் வெற்றி பெறுவதற் கிவையே வழிகளாம். கீழே விழுதற்கு முயற்சி வேண்டியதின்று. உயரச் செல்லவிடாது யாவற்றையுந்

தடுக்கின்ற நிலத்தினது ஈர்க்குமாற்றல் (Gravitation) போல் உயிரைக் கீழே யிழுக்கின்ற ஒரு வலியுண்டு. இதை மலமென்ப. மலம், இருள், கருமை யாவன ஒரு பொருட் பன்மொழிகளாம். இயற்கையாகவே ஒவ்வோருளத்திலும் மலமுளது. ஒளி நோக்கி மேற்செல்லும் உயிரின் முயற்சியைக் கீழ்நோக்கி யிழுக்கும் இருள் தடை செய்கின்றது. இங்ஙனம் ஒளிக்கும் இருளுக்கும் போர் நடக்கின்றது. இப்போரே அறம்; இதில் ஒளி பெறும் வெற்றியே வீடு. இயக்கத் தலைவனின் உதவியின்றி உயிர் இருளை விட்டகல்வ தெங்ஙனம்?

ஞாநிலத்திலுள்ள மலத்தைத் தாங்கிக்கொண்டு செல்கின்ற நீரிற் பெரும் பகுதி ஆறுகள் வழியாகக் கடல்போய்ச் சேர்கின்றது. வையகத்தின் அழுக்கை எல்லாம் வாங்கியும் கடல் கறைபடுவதில்லை. ஏனெனின், கடலில் ஓவா இயக்கமுண்டு. இயக்கம் தூய்மை செய்வதை இதனால் அறிந்துகொள்க. நீரை ஆவியாக்கி விண்ணில் ஏறச் செய்வது கதிரவன் வெப்பம் அல்லது தீயாகும். உயிரும் விண்ணேறுவதற்கு வழி இதுவாம். அழுக்கு நீங்கினாலன்றி நீர் மேலேறாது.

கடல்நீர் ஆவியாக மாறி, முகிலா யெழுந்து, மழையாய் விழுந்து, ஆறாய்ப் பெருகி, முந்நீரிற் கலப்பது உடலில் நாம் முன்னர்க் கண்ட சுற்றியக்கமாகும். இத்தகைய ஒரு சுற்றியக்கம் ஒளிக் கடலாகிய இறைவனுக்கும் உயிர்கட்கு முண்டென்று கொள்க. நீரைவிட நமக் கின்றியமையாததாகிய காற்றும் அசையாது நின்றுவிடின் நச்சுத்தன்மை எய்திவிடும். இயக்கத்தால் காற்று தன்னைத் தூய்மைப் படுத்திக்கொள்கிறது.

நில உருண்டை நிலைபெயராது நிற்குமாயின், அதன் விளைவு என்னும் என்று நினைப்பதற்கு மஞ்சுதும். ஞாயிறுந் திங்களுங் கோள்களும் உடுக்களும் இயங்கிச் செல்கின்ற முறையையும் மாட்சியையுங் கருதி விந்தை மேலிட்டு ஒடுங்கா உளமும் உளங்கொல்! இயக்கமின்றேல் தோற்றமுமில்லை வளர்ச்சியுமில்லை; படைப்பு (அயன்) மில்லை, காப்பு (அரி)மில்லை. எங்கும் வெளிப்பட்டு மிளிர்கின்ற இவ்வியக்கம் விண்ணிலும் மண்ணி



லும் வியத்தகுசெயல் பல நிகழ்த்தி, யாவற்றையுந் தத்தம் நெறியிற் செலுத்து மிவ்வியக்கம், அறிதற்கும் பகர்தற்கு மரிது.

அவா, வெகுளி, அழுக்காறாகிய கருமையிலிருந்து நீங்க, ஒளிக்கு மியக்கத்திற்கும் நிலைக்களனாய் விளங்குந் தலைவனது உதவி வேண்டும். தூங்கற்க, விழித்தெழுக.

முற்றும்.

---

# அகத்தியர் ஆரியரா? தமிழரா?

[வித்துவான் ஞா. தேவநேயன்]

மக்கள் முதன்முதல் தோன்றினவிடம் இந்துமகா சமுத்திரத்தில் ஒரு காலத் தமிழ்ந்துபோன நிலப்பரப்பே (Lemuria) என்பது, Hackel, Clater, Thurston முதலிய மேனாட்டுப் பண்டிதர்களின் உய்த்துணர்வு. திருநெல்வேலிக்குத் தெற்கே ஒரு பெரிய நிலப்பரப்பு (குமரி நாடு) முற்காலத்தி லிருந்ததென்பது தொல்காப்பியம், சிலப்பதிகாரம், புறநானூறு, கலித்தொகை, திருவாசகம், சிவதருமோத்தரம், கந்தபுராணம் முதலிய நூல்களால் அறியக் கிடக்கின்றது. அந்நிலப்பரப்பில் பேசப்பட்ட மொழியே உலக முதன்மொழி யென்றும், அதினின்றும் கிளைத்தவையே ஏனைய மொழிகளெல்லா மென்றும் Hackel பண்டிதர் மானிக்கிறார்.

உலகத்தில் மகன் தோன்றினது குரங்கினின் றென்பது Darwin, Hackel முதலியோர் கருத்து. அஃறிணை உயிர்களில் மனிதனுக்கு அடுத்தது குரங்கென்பது யாவர்க்கும் தெரிந்த செய்தி. குரங்குகளிற் சில சிறப்பறிவுள்ள இனங்கள் ஆதியில் தென்னாட்டில் இருந்ததாக இராமாயணத்தாற் றெரியவருகின்றது. இதுபற்றியே Darwin முதலியோர் கருத்தும் எழுந்ததாகும். தமிழிலும் குரங்கு வானரமென்று சொல்லப்படும். வால்+நரம்=வானரம், வாலையுடைய மனிதனென்பது பொருள். ஆனால் குரங்கினின்றும் மனிதன் உண்டானானென்பது தவறான கொள்கையே.

குமரிநாடு தமிழ்நாடாதலாலும், அதில் பேசப்பட்டது தமிழாதலாலும் தமிழரே முதன் மக்கள் வகுப்பினரென்றும், தமிழே முதன்மொழி யென்றும் பெறப்படும். உலகத்தில் மக்களுண்டான காலமாவது தமிழுண்டான காலமாவது இதுவென வரையறுத்துக் கூற ஏலாதவாறு அத்துணைத் தொன்மைத்தாயிருக்கின்றது. ஒரு மதிப்பாய்ச் சொல்லுவதானால் கி. மு. 10,000 என்று சொல்லலாம்.

மக்கள் பல்கினவுடன் பலமுறை கூட்டங் கூட்டமாக வடமேற்கே சென்று மேலாசியாவிற் குடியேறினதாகத் தெரிகின்றது. பைபிள் என்னும் கிறிஸ்தவ மறையில் ஆதியாகமத்தில் (கி. மு. 5000) மேலாசியாவில் கிளர்ந்த ஒரு பெரு வெள்ள வரலாறு கூறப்பட்டுள்ளது. அதன்பின்,

"பூமியெங்கும் ஒரே பாஷையும் ஒரே விதமான பேச்சும் இருந்தன.—ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம் பண்ணுகையில் சிநேயார் தேசத்திலே சமபூமியைக் கண்டு அங்கே குடியிருந்தார்கள்." (ஆதி. 11: 1, 2.) என்றிருக்கின்றது. இதிற் குறிக்கப்பட்டது தமிழர் வடமேற்கே சென்ற பல செலவுகளில் ஒன்றாதல் வேண்டும்.

காலஞ் செல்லச் செல்லப் பலவகைத் திரிபுகளினால் தமிழினின்றும் பலவகை மொழிகள் கிளைத்தன. இந்து தேசத்தில் தெற்கினின்றும் வடக்கே போகப்போகக் கொடுந்தமிழாயும் கிளைமொழியாயு மிருக்கும். பின்பு மேற்கே செல்லச் செல்லத் தனி மொழிகளாய் மாறிவிடும். ஆயினும் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் மாறாமலே யிருக்கும். தமிழர் வடமேற்கே போய்க் குடியேறினர் என்பதற்கு இதுவும் ஓர் ஆதாரமாகும். இதை யறியாதார் வடநாட்டு மொழிகளிற் பல தமிழ்ச்சொற்களுண்மைபற்றித் தமிழர் வடக்கேயிருந்து வந்தவரெனத் தடுமாறியுரைப்பர்.

எல்லா மொழிகளும் இயற்கை, இயற்கையியற்கை, செயற்கை, செயற்கையிற்செயற்கை என நாற்பாற்படும். அவற்றுள் தமிழ் ஒன்றுமே இயற்கையியற்கை. தெலுங்கு கன்னடம் முதலியவை இயற்கை. எபிரேயம், லத்தீன் முதலியவை செயற்கை. சமஸ்கிருதம் ஒன்றும் செயற்கையிற் செயற்கை.



மேனாட்டு அரசுகள் எல்லாவற்றுக்கும் முந்தியது யூதம் (the Jewish). அதற்குப் பிந்தியது பாபிலோனியம். பாபிலோனில் நாகரீகத்தைப் பரவச் செய்தவர் சுமேரியர் என்னும் தமிழ் வகுப்பாரென்னும் பிரித்தானியப் பொருட்காட்சிச் சாலையிலிருந்த ஹால் (Hall)என்பவர் கண்டுபிடித்திருக்கின்றார். சுமேரியர் நாகரீகத் தமிழரும் அவர்க்கு முன்சென்ற ஏனையோர் அநாகரிகத் தமிழருமாவார். பாபிலோனியத்திற்குப் பிந்தியது கிரேக்க ஆரியவரசு.

வடமொழியாரியர் இந்துதேசத்தில் (கி. மு. 3000) குடியேறினபோது வடுகு மட்டும் வடநாடுகளில் வழங்கிற்று. வடுப்பட்ட தமிழ் வடுகு. தெலுங்கு என்ற பெயர் மிகப் பிந்தினது. வடுகு முதலாவது கொடுந்தமிழாயிருந்து பின்பு (கி. மு. 3000) கிளைமொழியாய்ப் பிரிந்துவிட்டது. ஆரியர் இந்தியாவுக்கு வரும்போது அநாகரிகரா யிருந்தனர்.

" ஆரியர் மிலேச்சர்" என்பது திவாகரம்.

சமஸ்கிருதம் ஜெர்மானிய மொழியைச் சார்ந்ததென்று முன் கட்டுரையில் மொழிந்தாம். மேனாட்டு மொழிகட்கெல்லாம் உயிர்மெய் எழுத்துமுறை முதலியன இல்லாததுபோல வடமொழிக்கும் இல்லாதிருந்தன. பின்பு தமிழைப் பின்பற்றியே அவை வடமொழிக்கு வகுக்கப்பட்டன. இதை வடமொழியும் தென்மொழியும்' என்னுமோர் கட்டுரையில் விரிவாய் விளக்குவாம்.

ஆரியர் இந்தியாவிற்கு வந்தபின், வடநாட்டில் வழங்கும் கொடுந்தமிழ்ச் சொற்கள் வடமொழியில் மிகுதியாய்க் கலந்தன. ஆரியர் ஆரிய வர்க்கத்தி லிருந்துகொண்டு பல தேவதோத்திரத்திரட்டாகிய வேதங்களை யியற்றினார்கள். பிற நூல்களெல்லாம் பெரும்பாலும் தமிழ்ச் சார்பிற் பிறந்தவை. ஆரிய வரவுக்கு முன்னரே தமிழர் முத்தமிழிலும் பல கலை

களினும் கைத்தொழில்களினும் தலைசிறந்திருந்தனர். சிற்பம், கம்மியம், ஓவியம், கண்ணுள் வினை (Painting) முதலிய நுண்டொழில்களைக் கற்க யவன (கிரேக்கர்) ரும் சோனக (துலுக்கர்) ரும் வந்திருந்தனர். பின்பு தமிழ் தலைதாழ்த்தது. காரணம் யாதோ அறிகிலம். பாண்டியர் தமிழ்ப் புலவரை ஆதரித்திலர் போலும். தமிழ் நூல்கள் பயிலப்படாது ஏட்டுச் சுவடிகளாய் மட்டுமிருந்தன. அக்காலை வந்தார் அகத்தியர். (கி. மு. 2500)

அகத்தியத் தமிழ்க் கிளர்ச்சி (The Agustian Revival of Tamil Literature)

அகத்தியர் என்னும் பெயர் அகஸ்தியர் என்னும் வடமொழிப் பெயரின் தற்பவம். விந்தமலையை அடக்கினவர் என்று அதற்குப் பொருள் கூறுவர். தமிழரோ செந்தமிழ்ப் பெயராகக் கொண்டு தமிழுக்கு அகத்தியமானவர் என்று பொருளுரைப்பர். அகத்தியர் தென்னாடடைந்ததைப் பற்றிப் பல வரலாறுகளுள. அவற்றுள் இரண்டு வருமாறு :—

1. கைலாயத்தில் சிவபெருமான் திருமணத்திற்காகத் தேவரெல்லாங் கூடியபோது வடதிசை தாழ்ந்து தென்றிசை யுயர்ந்தது. அன்று பூமியைச் சமப்படுத்துவதற்காகத் தேவர் வேண்டுகோட்படி சிவபெருமான் கட்டளை பெற்றுத் தெற்கே சென்ற அகத்தியர், தென்னாட்டில் தமிழர் வினவும் வினாக்கட்கு விடை யளிக்குமாறு சிவபெருமானிடம் தமிழ் கற்றுப் பொதியமலை சென்று அங்கு வதிந்தனர்.—இதனால் அகத்தியர் தமிழரல்ல ரென்பதும், அகத்தியருக்கு முன்பே தமிழிருந்த தென்பதும் பெறப்படும்.

2. ஒரு காலத்தில் காசியிலிருந்த வடமொழிச் சங்கத்தார் அகத்தியரை அவமதித்தனர். அதனால் அவர் மாறுகொண்டு முருகனிடம் சென்று வரங்கிடந்தனர். முருகன் அவர்க்குக் காட்சி யளித்துச் சில ஏட்டுச் சுவடிகளைக் காட்டி, அவற்றால் தமிழை வளர்க்குமாறு பணித்தனர். அகத்தியர் அங்ஙனமே அச்சுவடிகளைக் கொண்டு போய்ப் பொதியத்தி



லிருந்து தமிழை வளர்த்தனர்.—இதனால் அகத்தியர்க்கு முன்பே தமிழ் நூல்கள் ஒரு முறை கல்வி வழக்கற் றிருந்தன வென்றும், அகத்தியர் அவற்றை ஆராய்ந்து தமிழ் வளர்த்தா ரென்றும் அறியப்படும்.

ஆரியம் அக்காலத்தில் மிகத் திருந்தாமலும் நிரம்பிய நூல்களில்லாமலு மிருந்ததே அகத்தியர் தமிழைக் கற்றதற்குச் சிறந்த காரணமா யிருத்தல் வேண்டும். அதோடு உச்சரிப் பருமையாலும் வடமொழி உலக வழக்கிற்கு ஏற்றதாயில்லை.

அகத்தியர் தென்னாடடைந்த போது குமரி நாட்டைக் கடல் கொள்ளவில்லை. அதன் தெற்கில் பஃறுளியாறும் மேற்கில் குமரி மலையும் வடக்கில் குமரியாறு மிருந்தன. பஃறுளி யாற்றங்கரையில் தென்மதுரை யிருந்தது. அதுவே அற்றைப் பாண்டியன் தலைநகர். அகத்தியர் முதனூல்களைத் தழுவித் தம் பெயரால் அகத்தியமெனப் பெயரிய ஒரு பெரு நூலைச் செய்தார். அது முத்தமிழையுங் கூறும் பன்னீராயிரஞ் சூத்திரங் கொண்டது. அதன் பெருமை பற்றி அதைப் பேரகத்தியமென்பது வழக்கம். இதை யறியாதார் சிற்றகத்தியமும் ஒன்றிருந்ததெனச் சாதிப்பர். அங்ஙனமாயின் ஒரு முதுபுராணரும் ஒரு சிற்றாசிரியரும் ஒரு சிறுகதையு மிருந்திருத்தல் வேண்டும். சிறப்பியல்பு பற்றி இனச் சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்க் கொடை வழக்காற்றினு முண்டு. (*c. f.* Akbar the Great; Queen Victoria the Good). இப்போது பேரகத்தியத்திரட்டு என வழங்கும் நூலிலுள்ள சூத்திரங்களிற் பல அகத்தியத்தைச் சார்ந்தனவல்ல; பிற்காலத்துச் சேர்க்கப்பட்டவை; ஆதலின் ஆராய்ச்சிக்காகா.

அகத்தியர் தமிழை வளர்க்குமாறு ஒரு சங்கம் (கழகம்) நிறுவி அதை ஆதரிக்கும்படி பாண்டியனை வேண்டினர். அவனும் ஆதரித்தனன். அதுவே தலைச் சங்கம். அஃது இருந்தது தென்மதுரை. அதற்கிலக்கணம் அகத்தியம். அதன் இறுதிக் காலத்தில் தொல்காப்பியர், அவிநயர் முதலிய பன்னிருவர் அகத்தியரிடம் தமிழ் பயின்றனர். அவருட் பெரும்பாலார்

ஆரியர். தலைச்சங்கத்தில் அகத்தியர் இருந்தது மகேந்திர (குமரி) மலை. அங்கிருந்தே சிவபெருமானிடம் ஆகமங்களைக் கேட்டறிந்ததாகத் தெரிகிறது. பின்பு குமரி நாட்டின் இடைப் பகுதியைக் கடல் கொண்டது. (தென்பாகம் சிறிது காலமிருந்து பின்பு கடலில் அமிழ்ந்தது. அதுவே சூரபதுமன் ஆண்ட இடம். வடபாகம் இராமாயணத்திற்குப் பின்பு அமிழ்ந்ததாகத் தெரிகிறது.)

குமரி நாட்டைக் கடல்கொண்ட பின் பாண்டியன் தலைநகர் பொருநை (தாமிரபாணி) முகத்திலிருந்த கபாடபுரத்திற்கு மாற்றப்பட்டது. அகத்தியரும் தமது இருக்கையைப் பொதியமலைக்கு மாற்றிக்கொண்டனர். பொதியம் என்பது பொதியில் என்பதன் மரூஉ. பொது + இல் = பொதியில் = அம்பலம். (இலக்கணப்போலி.) அக்காலத்து ஆசிரியரெல்லாம் முனிவராதலின் மலைகளே இருக்கைகளாயிருந்தன. பொதியிலுக்கு மறுபெயர் மலையம். மலை என்னும் பொதுப்பெயரே அம் சாரியைப்பெற்றுப் பொதியிலைச் சிறப்பாய்க் குறிக்கும். பொதுப்பெயர் சிறப்புப் பொருளைச் சுட்டுவதை மலரடி என்னும் தொடரிற் காண்க. மலர் என்றது தாமரை மலரை. மேற்குத் தொடர்ச்சி மலைகள் அக்காலத்தில் குடமலை யெனப்பட்டன. மகேந்திரமும் பொதியமும் குடமலைப் பகுதிகளாகும். குடதிசையிலிருந்தது பற்றி அகத்தியர் குடமுனிவர் எனப்பட்டனர். அதை யுணராதார் குடத்திற் பிறந்தவரென்று புராணங் கட்டிவிட்டனர். அதன் பின்பு கும்பமுனி, கலசமுனி, என அதன் இனமொழிகளாலும் பெயர் வழங்கத் தலைப்பட்டன.

கபாடபுரத்தில் இடைச்சங்கம் நிறுவப்பட்டது. தொல்காப்பியர் முதலிய அகத்தியர் மாணவர் பன்னிருவரும் தலைமை பெற்றிருந்தனர். அகத்தியமும் (தலைச்சங்கத்திற்கும் இடைச்சங்கத்திற்கும் இடையில் தொல்காப்பியர் செய்த) தொல்காப்பியமும் இலக்கணமாயின. அகத்தியர் இடைச்சங்கத்தில் நீடித்திருக்கவில்லை. அகத்தியமும் அங்ஙனமே தலைச்சங்க காலத்தில் மக்கட்கு அறிவும் ஆற்றலும் ஆயுளும் அதிகமாயிருந்தி



னால் முத்தமிழும் ஒருங்கு பயிலப்பட்டன. இடைச்சங்க காலத்தில் அவை மிகக் குறுகினதினால் முத்தமிழ் வேறு வேறு பிரிந்தன.

இடைச்சங்கம் இராமாயண காலம். (கி. மு. 2000) வடமொழியில் முதற்காவியம் வான்மீகியிராமாயணம். வான்மீகியும் இராமரும் சமகாலத்தவர். இராமர் தென்றிசைக்குச் சென்றபோது அகத்தியரிடம் வில்லம்பு பெற்றனர். அகத்தியர் தம் இசையறிவால் இராவணனை வென்று அவனைத் தமிழ் நாட்டிற் காவிடாவண்ணம் செய்திருந்தனர்.

சுக்கிரீவன் சீதையைத் தேடுமாறு அனுமானைத் தென்றிசைக் கனுப்பும்போது,

"..................அவ்வாறே ஆந்தரம், புண்டரம், சோளம், பாண்டியம், கேரளம் முதலிய நாடுகளையும் காண்பீர்கள்......... அந்த மலயமலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனி சிரேஷ்டரான அகத்தியரைக் காண்பீர்கள்.........அதைவிட்டு அப்பாற்சென்றால் முத்தாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பொன்மயமான பாண்டிய நாட்டின் கதவைக் காண்பீர்கள். (இதுவே கபாடபுரம்) அதன்பின் தென் சமுத்திரத்தை யடைந்து பின்பு செய்ய வேண்டியதை நிச்சயம் பண்ணுங்கள். அந்த சமுத்திரத்தின் கண்ணே மலைகளுட்சிறந்ததும், சித்திரமான பலவித குன்றுகளையுடையதும், பொன்மயமானதும், நானாவித மரங்களும் கொடிகளும் செறிந்ததும், தேவர்களும் ரிஷிகளும் யக்ஷர்களும் அப்சரப் பெண்களும் தங்குவதும், சித்தர்களும் சாரணர்களும் கூட்டம் கூட்டமாக இருப்பதுமாகிய அழகிய மகேந்திர மலை முழுகிக்கிடக்கின்றது." என்று சொன்னதாக வால்மீகியிராமாயணம் (மொழி பெயர்ப்பு) கிஷ்கிந்தா காண்டத்திற் கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் ஜமதக்கினியின் புதல்வரென்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். ஜமதக்கினி பரசுராமரின் தந்தை. பரசுராமரும் இராமரும் சமகாலத்தவர். ஆகவே எவ்விதத்திலும் இடைச்சங்க காலமே இராமாயண காலமாத லறிக.

அகத்தியர் இராமாயண காலத்துக்கு முன்பே தென்னாடு வந்தவர். இக்காலத்திற் றெரியும் தமிழிலக்கணிகள் எல்லாரினும் முற்பட்டவராதல்பற்றி அவரைத் தமிழரென்று சொல்லுதல் பொருந்தாது. அகத்தியர் காலத்திலிருந்து தமிழை வளர்த்தவர் பெரும்பாலும் ஆரியரேயாவர். அவர்க்குத் தமிழே தாய்மொழியாயிற்று. (கடைச் சங்கத்தில் நக்கீரனார் கபிலர் முதலிய அந்தணரே தலைமை பெற்றிருந்தனர். இற்றைப் பார்ப்பனரோ தம் முன்னோர் செய்த நன்றியை யெல்லாம் சிதைத்து வருகின்றனர்.) கடைச்சங்க காலத்திற்குப் பின், பல பாண்டியரிருந்தும் எங்ஙனம் தமிழை வளர்த்திலரோ, அங்ஙனம் தலைச் சங்கத்துக்கு முன்னும் பல பாண்டியர் தமிழை வளர்த்திலர். அகத்தியர்க்கு நெடுங்காலத்திற்கு முன்னர்த்தான் தமிழரே தமிழை ஆதரித்திருக்க வேண்டும்.

(தொடரும்.)

---

# கோளறு பதிகம் - செய்யுள் ௨.

[திரு. M. S. பூர்ணலிங்கம் பிள்ளை அவர்கள், B. A., L. T.]

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனா
லொன்பதொ டொன்றொடேழ பதினெட்டொடாறு
முடனாய நாள்களவைதாம்
அன்பொடு நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

இது திருஞான சம்பந்தர் தேவாரத்தில் ஒன்று. இந்நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் திருமறைக்காட்டில் அற்புதங்கள் செய்து அமர்ந்திருந்தகாலை கூன்பாண்டியவரசன் மனைவியார் மங்கையர்க்கரசியாரும் மதிமந்திரி குலச்சிறை நாயனாரும் அனுப்பிய தூதர் பிள்ளையாரிடம் தாம் கொண்டுவந்த சுருளைக் கொடுத்தனர். சமண சமயப் பெருக்கால் சைவசமயம் குன்றியதை அதில் பொறித்திருந்தது. அரசனும் அச்சமயந் தழுவியதை நொந்து பாலறாவாயரை அழைத்துச் சைவ சமயத்தை முன்னிலைக்குக் கொண்டுவர நினைத்தனர். சுருளைப் பிரித்துப் படித்ததும் ஞானசம்பந்தருடைய மனம் வருத்தமுற்று உடனே பாண்டிய நாட்டிற்குப் புறப்பட வெண்ணினர். வெகு காலம் சமண சமயப் பெரியராயிருந்து சூலை நோயால் மீட்கப் பட்ட வாக்கரசர் சமண வாசகத்தை யோதி நாளும் கோளும் சரியில்லை, புறப்படுவது நலமன்றென்றனர். அப்பொழுது சீகாழி மன்னர், புத்தேளிருக்காகப் பாற்கடலைக்கடைந்தஞான்று வாசுகி விடத்தைக் கக்க, அதை விழுங்கிய எம்பெருமானாகிய நீலகண்டன்மீது அன்பு அடியாரவர்க்கு மிகின் எக்கோளாயினும் எந்நாளாயினும் இடர்ப்படுத்தாது என்றுகூறி யேகினர். செயமாது கைகொடுப்பள். நோய்பே யணுகாது. விலங்குகள் விலகும் என்று பலவாறு உறுதி மொழிந்தனர். முதற் செய்யுளில் மூன்றாமடியில் 'நவகோள்களாகிய ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே' (ராகு, கேது) என்றும் இரண்டாஞ் செய்யுள் மூன்றாமடிக்கண் 'ஒன்பதொடொன்றொடேழும் பதினெட்டொடாறு முடனாய நாள்கள்' என்றும் வருகின்றதைக் காண்கின்றன. பின் தரப்பட்ட அடியின் பொருளை உரைகாரர் மயங்கக் கூறியுள்ளார். 'பிரயாணத்திற்காகாத பன்னிரண்டு நட்சத்திரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. 9-பூரம், 1-கார்த்திகை, 7 ஆயிலியம், 18-பூராடம், ஆறுமுடனாய நாள்கள் மேற்கூறிய நான்கு மல்லாது எட்டு நட்சத்திரங்களுமாம்.' 6 எப்படி 8-ஐக் குறிக்கிறதென்பது விளங்கவில்லை. நிற்க,

திரு. க. சாதாசிவ செட்டியாரவர்கள் 'அகத்தியர் தேவாரத் திரட்டு உரையில் எழுதியது அடியிற் குறிக்கப்பெற்றிருக்கின்றது. அவ்வுரையும் பொருத்தமாயில்லை.

[ஒன்பது-ஒன்பதாவது நாளும், ஒன்பதொடு ஒன்று-பத்தாவது நாளும், ஒன்பதொடு ஏழு-பதினாறாவது நாளும், பதினெட்டு-பதினெட்டாவது நாளும், ஆறும்-ஆறாவது நாளும்,

உடனுய நாள்கள்-இவைகளோடு சேர்த்தெண்ணப்படும் நாட்களும், அவை-ஆகிய அவைகள் யாவும்.

இத்திருப்பாட்டில் ஆகாதனவாய நாட்கள் அடியார்க்கு நல்லனவென்பது கூறப்பட்டது. பிரயாணத்திற்கு ஆகாத நாட்கள்:—பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி என்பனவாம். ஒன்பதாவது—ஆயிலியம், பத்தாவது—மகம், பதினாறுவது—விசாகம். பதினெட்டாவது—கேட்டை, ஆறுவது—திருவாதிரை, உடனுய நாட்கள்—பிற ஏழு நாட்கள். இவ்வாறன்றிப் பலபடியெண்ணுவோர் எண்ணிய தெய்தாது இடர்ப்படுவரென்க.]

இனி, இவ் வையப்பாட்டை எம்மூரின்கணுள்ள திருவாளர் தில்லைநாயகச் சோதிடரிடம் எடுத்தோதி விளக்குமாறு வினவினேன். அன்னார் சிறிது சிந்தித்து அளித்த விடை மிகப் பொருத்தமாகத் தோன்றிற்று. அதனைச் செந்தமிழ்ச் செல்வியைப் போற்றுவாருக்குந் தெரிவிக்கக் கருதி இவண் வரைகின்றேன்.

9, 1, 7 ஆக மூன்று. 18 ஒடு 6-இருபத்து நாலு, ஆக 24 + 3 = 27 நட்சத்திரங்கள். இவற்றில் எதுவேயாயினும் அதனால் இடரில்லை. அதற்குக் காரணம் ‘ஈசனன்பு உளமே புகுந்தது’ அவனன்பு அடியார்க்கு நிறைந்துளதேல் கிரகங்களும் நட்சத்திரங்களும் கேடு இழைக்கா என்று தெற்றெனத் தெளிவுறுகின்றது. யான் மயக்கவுரை யென்று கூறியதை மறுத்து அது தெளிவுரை யென்று காட்டுவார்க்கு என்றுங் கடப்பாடுடையேன்.

———



# தென்னிந்திய தமிழ்ச் சங்கம் திருநெல்வேலி

## தனித்தமிழ்த் தேர்வுகள்

தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களின் தமிழறிவை வளர்த்துத் தமிழறிஞர்கள் பலரைப் பெருக்கித் தமிழைப் பண்டைய வுயர்நிலைக்குக் கொண்டுவரத் தொண்டு புரிதலை மேற்கொண்டு 1924 ஜூனில் திருநெல்வேலியில் நிறுவப் பெற்றுள்ள தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் தனித்தமிழ்த் தேர்வுகள் 1926 ஜூன் முதல் ஆண்டுதோறும் திருநெல்வேலி, திருச்சி, சென்னை ஆரணி திருவனந்தபுரம், சிதம்பரம் ஆகிய தலை நகர்களில் நடைபெறுகின்றன. நிகழும் ஆண்டு வரை 101 மாணவர்கள், தமிழ்த் தேர்வு, இளந்தமிழ்ப் புலவர், தமிழ்ப்புலவர் பொது, சிறப்பு ஆகிய தேர்வுகட்கும் விண்ணப்பித்துள்ளார்கள். 34 பேர்கள் தேர்ச்சி யுற்றுத் தேர்ச்சியிதழும் பெற்றுப் பல கலாசாலைகளில் ஆசிரியர்களா யமர்ந்திருக்கின்றனர். வாரந் தவறாமல் உள் நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் சங்கப் பாடமுறைப் புத்தகம் முதலியன வேண்டிப் பலர் எழுதிப் பெற்றுப் பயின்று வருகின்றார்கள் ஆங்காங்குத் தமிழாசிரியர்களும் தங்கள் முயற்சியில் பல மாணவர்கட்குச் சங்கத் தேர்வுகட்குரிய பாடங்களைக் கற்பித்து மாணவர்களைத் தேர்ச்சி பெறவுஞ் செய்து வருகின்றார்கள். திருநெல்வேலிப் பக்கமுள்ளவர்கள் படிக்க விரும்பின் சங்கத்தைச் சார்ந்து நடத்தப்படும் “திருவள்ளுவர் செந்தமிழ்க் கல்லூரி”யில் சேர்ந்தும் பயில ஏற்பாடு செய்யப்படும்.

தமிழ்ச் சங்கத் தேர்வுகளை ஆங்காங்கு நடத்தித்தந்த அறிஞர்கட்கும், வினாத்தாள் குறித்தும் விடைத்தாள் மதிப்பிட்டும் உதவிய தமிழ்ப் பேரறிஞர்கட்கும் சங்கத்தின் நன்றி யறிதலை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றனம்.

1931 ஜூன் 25, 26, 27, (எா௮ ஆனி ௰௧, ௰௨, ௰௩) வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் நடந்த தனித்தமிழ்த் தேர்வுகட்கு விண்ணப்பித்துத் தேர்ச்சி யுற்றிருப்பவர்களின் பெயர் முதலியன அடியிற் குறிக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேர்வுக்கு விண்ணப்பித்தவர் ஒன்பதின்மர்; எழுதியவர் ஐவர்; தேர்ச்சி யுற்றவர் நால்வர். இளந்தமிழ்ப் புலவர்க்கு விண்ணப்பித்தவர் ஒருவர். அவர் எழுதித் தேர்ந்துள்ளார். தமிழ்ப் புலவர் பொதுவுக்கும் விண்ணப்பித்தவர் இருவர், எழுதியவர் இருவர், தேர்ந்தவர் ஒருவர்.

# தேர்ச்சி யிதழ் பெறத் தக்கவர்

## தமிழ்த் தேர்வு

### இரண்டாவது வகுப்பு

பதிவெண் 78. V. இராமலிங்க நாயக்கர், குண்ணத்தூர்,
ஆரணி, வடஆற்காடு ஜில்லா.

### மூன்றும் வகுப்பு

„ 75. சு. பார்வதி யம்மாள், சிவன் கோயில்,
தெற்கு ரத வீதி, பாளையங்கோட்டை.

„ 74. K. M. அண்ணாமலைச் செட்டியார்,
குப்பங்கிராமம், கண்ணமங்கலம் P. O.,
வடஆற்காடு.

„ 73. K. A. தாண்டவமூர்த்திக் கவுண்டர்,
உபாத்தியாயர், குப்பங்கிராமம்,
கண்ணமங்கலம் P.O., ஆரணி, வடஆற்காடு.

## இளந்தமிழ்ப் புலவர்

### மூன்றும் வகுப்பு

„ 25. சே. ஷான்முகமது ராவுத்தர், உபாத்தியாயர்,
தென்னூர் மந்தை, திருச்சி.

## தமிழ்ப்புலவர் பொது

### மூன்றும் வகுப்பு

„ 7. யோ. தங்கசாமி பாண்டியன், குறும்பலாப்பேரி,
பாவூர்ச் சத்திரம் P. O., தென்காசி.

திருநெல்வேலி, பு. இ. புன்னைவனநாதன்,
14—8—81 அமைச்சர்

199647

# புதிய கழக வெளியீடு

---

**1.** ஜினோவாவீரன் அல்லது கொலம்பசு வரலாறு:—

இஃது எளிய இனிய உரைநடைகொண்டு திகழ்வது. இது கற்பவர்க்கு மனவெழுச்சி தருவதோடு சோம்பல் தவிர்த்து முயற்சியிற் புகுத்திப் புகழை நல்குவது. அழகிய பதிப்பு விலை அணா 6.

**2.** நளாயனி அல்லது நங்கையர்க்கரசி:—

நளாயனியின் வரலாறு பாரதக் கதையில் கூறப்பட்டிருப்பினும், இந்நூல் புதிய முறையில் சிறந்த பழமொழிகளைப் பிணைத்தும் முன்னோர் நூல்களிற் பயின்று வரும் அரும்பொருளடங்கிய சொற்றொடர்களை இடநோக்கி யமைத்தும் அழகுபட எழுதப்பட்டிருக்கின்றது. உளங்கவரும் நடையழகு வாய்ந்தது. இதன் விலை அணா 7.

**3.** பொன் கதைக்கோத்து (க. ப. சந்தோஷம் எழுதியது)

இதன்கண் பொன் சம்பந்தமான நான்கு அருமையான ஆங்கில நாட்டுக் கதைகள் இனிய தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன.
விலை அணா 4.

**4.** தோமாஸ் ஆல்வா எடிசன்:—

இவர் அமெரிக்காவில் 1847-ல் பிறந்தவர். மின்சார விளக்கு மின்சார வண்டி, கிராமபோன், டெலிபோன், தற்காலத் தந்தி சினிமா முதலிய ஆயிரக்கணக்கான புதுமைகளைக் கண்டு பிடித்தவர். இன்னும் புதிய புதிய கருவிகளைக் கண்டு பிடித்துக்கொண்டே வருகின்றார். இவரது வாழ்க்கை வரலாறு இப்போதுதான் முதன் முதல் தமிழில் வெளிவந்துள்ளது. இது படிக்கப்படிக்க இன்பந்தரும். இனி நாட்டுக்கு இத்தகையார் வரலாறே நனிபயன் தரும். மாணவர்கட்கும்
ராப்பர் பதிப்பு அணா 12 கலிக்கா ரூபா 1 4

**5.** நளவெண்பா மூலம் (புகழேந்திப் புலவர்) அணா 6

**6.** முல்லைப்பாட்டு விளக்கம்

இது பத்துப் பாட்டில் ஒன்று. இதன்கண் நச்சினார்க்கினியருரையும், கொண்டு கூட்டும், பதவுரையும், அருஞ் சொற்பொருளகராதியும் அடங்கின. அழகிய திருத்தமான பதிப்பு விலை அணா 10

**7.** திருவிளையாடற் புராணம்

திருவாலவாய்க் காண்டம் உரை (வெளிவந்து விட்டது) ரூ 7 8

**8.** திருவிளையாடல் மூலம்

அரும்பதவுரையும், இரண்டு ஆப்டோன் படங்களும் பாட்டு முதற் குறிப்பகராதியு மடங்கியது. விலை ரூ. 4 0

**9.** இளஞ்சேய்க் கோல்லி (புதிய பதிப்பு) 0 8
திரு. க. ப. சந்தோஷம் எழுதியது

## புதிய தமிழ் நூல்கள்

ரூ. அ.

பன்னூற்றிரட்டு (சங்கப் பதிப்பு) 8 12
வைத்திய சாரசங்கிரகம் 6 0
மகாபாரதம் அநுபந்த வசனத்துடன் 5 0
திருவள்ளுவர் 0 8
ஷை ஆங்கிலத்தில் 0 8
கூடற்புராணம் 0 12
சாக்ரட்டீஸ் (Socrates) வரலாறு 1 8
பலப் பரிபாலனம் (பண்டிட் S.S. ஆனந்தம்) 1 0
டாக்டர் [illegible] வைத்திய நூல் 1 0
[illegible] திருப்புகழ் 0 8
[illegible] திருநாவுக்கரசு முதலியார் வரலாறு 0 8

மணி திருநாவுக்கரசு முதலியார் எழுதியவை

பல்பொருட் கட்டுரை 1 0
புலவர் சரிதை 2 பாகம் 1 8

பல்லாவரம் மறைமலையடிகள் எழுதியவை

அறிவுரைக் கொத்து 2-ம் பதிப்பு 2 4
கோகிலாம்பாள் கடிதங்கள் ,, [illegible]
மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் [illegible] 0
பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் [illegible]
அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் ஞான யோகமும், [illegible] 1 0
[illegible] மஞ்சரி (புதிய பதிப்பு) 1 10

---

[illegible]
The Indian Pilgrim's Guide 1 4
[illegible] 0 8

ஞான திரவியம் குமரேசனார் எழுதிய நாவல்கள்

[illegible] 0 14
[illegible] 0 10
[illegible] புராணம் மூலமும் வசனமும் [illegible] உரையுடன், புதிய பதிப்பு 2 4
பெண் நலன் (ஆ. வி. சித. சொக்கலிங்க னவர்கள்) 0 6
விநாயக புராண தத்துவ விளக்கம் 0 1
நவராத்திரி விரதம் 0 1
தீபாவளி பண்டிகை 0 1
[illegible] வள்ளல்கள் சரித்திரம் 0 12
[illegible] 0 10
[illegible] 0 12
[illegible] அச்சிடப்பட்டது 2 8
[illegible] விளக்க வினா விடை 0 2

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.